
# செம்மணி

நிலம் 3 துகள் 122 வள்ளுவர் ஆண்டு 2052, 19 - 25 கார்த்திகை 2022 வாரமலர் பக்கங்கள் 25

## அரச தலைவர் தேர்தலையே முதலில் நடத்த ரணில் திட்டம்

*பொருளாதாரத்தை மீட்கும் வழி என்று நம்புகின்றார்*



நாட்டில் தேர்தல் ஒன்று நடத்தப்படுவதாக இருந்தால் முதலில் அரச தலைவருக்கான தேர்தலே நடத்தப்படவேண்டும் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக நம்புகின்றார் என்று அவருக்கு நெருக்கான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உள்ளூராட்சி சபைகள் அல்லது மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதால் பொருளாதாரத்திற்கு மேலும் பின்னடைவே கிட்டும் என்றும் ரணில் கருதுகின்றார் என்கின்றன அந்த வட்டாரங்கள்.
ரணில் விக்கிரமசிங்க கடந்த ஆடி (ஜூலை) மாதம் நாடாளு பக்கம் 02

## தனுஸ்கவை பிணையெடுக்க 38,000 ஆஸி. டொலர் செலவு

*இலங்கை கிரிக்கெட் சபையே வழங்கியது*




இலங்கை கிரிக்கெட்ட அணி வீரர் தனுஸ்க குணதிலக்க மீதான பாலியல் வன்புணர்வுக் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து அவரைப் பிணையெடுப்பதற்கு 38 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்களை இலங்கை கிரிக்கெட் சபை செலவிட்டுள்ளது. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடருக்காக ஆஸ்ரேலியா சென்ற தனுஸ்க, ரின்டர் எனப்படும் சமூக வலைத் பக்கம் 10

## ஐந்தில் இரு பெண்களுக்கு பாலியல் துன்புறத்தல்கள்

*இலங்கையின் அவலம் குறித்து அமைச்சர் தகவல்*

இலங்கையில் உள்ள ஒவ்வொரு ஐந்து பெண்களுக்கும் இருவர் பாலியல் துன்பங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கே. இதனால் பெண்கள் தொடர்பான சட்டங்கள் மறுசீரமைக்கப்படவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.
நாடு முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில் பெண்கள் பாலியல் துன்பங்களுக்கு உள்ளாவது குறித்துக் கண்டறிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
"பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும்போது அது குறித்து முறையிடுவதற்கு உகந்த சூழல் காவல் நிலையங்களில் இல்லை. துன்புறுத்தல் தொடர்பாக ஒரு பெண் முறையிட வரும்போது காவல் நிலையத்தில் உள்ள எல்லோரும் அவரைச் சூழ்ந்துகொள்கின்றனர். தகவல்கள் வெளியே கசியாமல் பார்த்துக்கொள்வதற்கு ஒவ்வொரு காவல் நிலையத்திலும் குறைந்தது 13 பெண் காவ பக்கம் 02

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் 2 நாள் பயணமாக கொழும்பு வருகை



நாளை மற்றும் நாளை மறுதினம் தனது இரண்டு நாள் இலங்கை விஜயத்தின் போது, அதிபர் ரணில் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள் மற்றும் பல கட்சிகளின் உயர் மட்ட தலைவர்களுடன் டோவல் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.
முன்கூட்டியே திட்டமிடப்படாத இந்தத் திடீர் பயணம் அரசியல் அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளது. இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இந்தியாவின் பதிலை கொழும்பு எதிர்பார்த்திருக்கும் பக்கம் 10

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# தமிழ்த் தலைவர்களும் நரித்தனம் கற்கவேண்டும்

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரம் பேச்சு நடத்தப் போகின்றேன் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அறிவித்து ஒரு வாரம் கடந்து விட்டது. ஆனால் பேச்சுக்கான எந்தவித முன்னேற்பாடுகளும் எடுக்கப்படவில்லை.

தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகள் தொடர்பாகக் குறிப்பிட்டு, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்குத் அடுத்த சுதந்திர தினத்திற்கு முன்னர் (மாசி 4ஆம் நாள்) தீர்வு எட்டப்படும் என்றுவேறு நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் ரணில். இதையடுத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படப்போவதான ஒரு தோற்றப்பாட்டை தமிழ் ஊடகங்கள் வழக்கம்போல ஏற்படுத்தின. ஆனால் ஊசிப்போன பட்டாசு போன்று அது உடனடியாகவே நமுத்துப் போய்விட்டது. இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றியல்ல உடனடிப் பிரச்சினைகளுக்கான முடிவுகள் கூட காணப்படவில்லை அல்லது அது பற்றிய ஆராய்வதற்கு ரணிலுக்கு நேரமில்லை.

இது பற்றித் திருவாய் மலர்ந்துள்ள தமிழ்த் தலைவர்கள் ரணில் பேச்சோடு நிற்காது செயலிலும் இறங்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றனர். ஒருபடி மேலே சென்று பன்னாட்டுச் சமூகத்தை திருப்திப்படுத்துவதற்கான கருத்துக்களைத் தெரிவிக்காது உண்மையான ஈடுபாட்டோடு ரணில் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

இவர்களின் கருத்துக்களையோ கண்டனங்களையோ பொருட்படுத்தக்கூடிய நிலையில் ரணில் இன்று இருக்கிறாரா என்று கேட்டால் இல்லை என்பதே பதில். நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டு பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு பொருளாதாரத் தளர்வு நிலையை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டாலே அவருக்குப் போதும். அவர் அரசியல் ரீதியாக வெற்றிகரமான தலைவராக உருவாகிவிடுவார்.

தமிழர்களின் பிரச்சினை அதற்கு இடையில் ஒரு சிறு பிரச்சினை மட்டுமே. இதைத் தீர்ப்பதன் மூலம் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த முடியாது என்பது நன்கு தெரியும். அதே நேரம் பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தப் புள்ளியாக இருக்கக்கூடிய தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலும் தான் அக்கறை கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்வது மட்டுமே அவருக்குப் போதுமானதாகவும் இருக்கும். அதற்கு மேல் பன்னாட்டுச் சமூகமும் தமிழர் பிரச்சினை தொடர்பில் அவருக்கு நெருக்கடிகளைக் கொடுக்காது.

இந்தியா உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகத்திற்கு தமிழர்களின் பிரச்சினை தீர்வதால் கிடைக்கப்போகும் நன்மை என்று பெரிதாக எதுவுமில்லை. இன்னும் சொல்லப்போனால் இலங்கையில் தலையிடுவதற்கான ஒரு பிரச்சினையை அவர்கள் இழந்துவிடுவார்கள் என்கிற அளவில் அது அவர்களுக்குப் பாதகமானதே. எனவே பன்னாட்டுச் சமூகத்தை வைத்து ரணிலை வழிக்குக் கொண்டு வந்து தீர்வைப் பெற முடியும் என்பது வெறும் கனவே. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இது நாடாளுமன்றில் உரத்துப் பேச வேண்டுமானால் உதவலாமே தவிர வேறு பயன் ஏதுமில்லை.

ரணிலை வெல்வதற்கும் வழிக்குக் கொண்டு வருவதற்கும் தமிழ்த் தலைவர்களுக்கு நேர்மையைவிடவும் குள்ளநரித்தனம் தேவை. அதற்கு அவர்கள் பழகவேண்டும். ரணில் பனங்காட்டு நரி, தமிழ்த் தலைவர்களின் சலசலப்புகளுக்கு அஞ்சப் போவதில்லை. நரித்தனத்தால் மட்டுமே அவரை வழிக்குக் கொண்டுவர முடியும்.



## அரச தலைவர்...

மன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவின் மூலம் அரச தலைவரானார். அதன் பின்னர் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தின்படி 2023 ஆம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) 23ஆம் நாளுக்குப் பின்னர் அவர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியும்.

தற்போதைய நாடாளுமன்றம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதனால் தேர்தல் ஒன்று உடனடியாக நடத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. அதே நேரம் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஏற்கனவே முடிவடைந்துவிட்டது. ஆனால், ஒரு வருட காலத்திற்கு அது கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்து பல ஆண்டுகளாகிவிட்டன. இந்தத் தேர்தல்களை உடன் நடத்த வேண்டும் என்றும் அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.

நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றில் எதனை நடத்தினாலும் அது தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மேலும் பலம் சேர்ப்பதாகவே அமையும் என்று அரச தலைவர் நம்புகிறார் என்று அவருக்கு நெருக்கமான நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.

முதலில் அரச தலைவருக்கான தேர்தலை நடத்துவதே பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான வழி வகையாக இருக்கும் என்று அவர் கருதுகின்றார்.

"அரச தலைவர் தேர்தலை முதலில் நடத்துவதன் மூலம் நாட்டிற்குத் தேவையான அடிப்படை மாற்றங்களைச் செய்வதற்கான மக்களாணை தனக்குக் கிடைக்கும் என்று அவர் (ரணில்) கருதுகின்றார்" என்று தெரிவித்தர் அவருக்கு நெருக்கமான நண்பர் ஒருவர்.

அரச தலைவர் தேர்தலைத் தவிர்த்து வேறு எந்தவொரு தேர்தலுக்கு அவர் சென்றாலும் அது தற்போதைய ஆளும் அணிக்குள் பிளவுகளை உண்டாக்கும் என்பதையும் அவர் கவனத்தில் கொண்டிருக்கின்றார் என்று அவருக்கு நெருக்கமான மற்றொரு வட்டாரம் தெரிவித்தது.

ஆனால், அரச தலைவர் இப்போதைக்கு எந்தவொரு தேர்தல் தொடர்பிலும் அக்கறை கொள்ளவில்லை என்று அரச தலைவர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

"அவரது (ரணில்) முன்னுரிமைப் பட்டியலில் தேர்தல் இல்லை. எந்தவொரு தேர்தல் பற்றியும் எதுவும் அவர் இதுவரையில் பேசியதில்லை. நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து அதனை எப்படி மீட்டெடுப்பது என்பதிலேயே அவரது முழுக் கவனமும் இருக்கிறது"

## ஐந்தில்...

லர்கள் தேவை என்று மதிப்படப்பட்டுள்ளது.

"அண்மையில் என்னிடம் வந்த ஒரு பெண், தான் 15 வயதில் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளானது குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்போதுதான் தன்னால் மணவாழ்க்கைக்குள் நுழைய முடியும் என்று அவர் கவலைப்பட்டார். இதுதான் இன்று இந்த நாட்டிலுள்ள நிலைமை" என்றார் அமைச்சர்.

இரண்டு வயதுக்குக் குறைந்த குழந்தைகள் உள்ள பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வதைத் தடுப்பதற்கான சட்டங்களைக் கொண்டுவருவதற்கான பத்திரங்கள் அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# நீங்கள் கருணாநிதி இல்லை சம்பந்தரே!

பிரேம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் தலைவர்களது கூட்டம் கடந்த வாரம் கூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் வராத காரணத்தால் அந்தக் கூட்டம் கைவிடப்பட்டது. அந்தக் கூட்டம் பிறிதொரு தினத்தில் தனது தலைமையில் நடைபெறும் என்று மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் பிளவுகளும் தலைமைப் போட்டியும் எந்தவளவு தூரம் உச்சம் பெற்றுள்ளன என்பதற்கான ஆகப் பிந்திய சாட்சியம் இது.

இந்தக் கூட்டத்திற்கான அழைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான மதியாபரம் ஆபிரகாம் சுமந்திரனால் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அப்படியொரு கூட்டம் நடக்கப்போவதாகப் பின்னர் ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகி இருந்தன. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் அவரது இல்லத்திலேயே கூட்டம் இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

அந்தக் கூட்டத்திற்கு வருகை தராத மற்றைய கட்சிகளின் தலைவர்கள், கூட்டம் குறித்த முறையான அறிவிப்பு தமக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஊடகங்களில் பார்த்தே தமக்கு இதுபற்றித் தகவல் தெரிந்தது என்றும் கருத்துரைத்திருக்கிறார்கள்.

இதுபோல சுமந்திரன் அழைப்பு விடுத்த கூட்டத்தை ஏனைய கட்சிகளான புளொட், ரெலோ ஆகியன புறக்கணிப்பது அண்மைக் காலத்தில் இது இரண்டாவது சம்பவம். இதற்கு முன்னர் அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்வதற்குக் கூடுவோம் என்று சுமந்திரன் விடுத்த அழைப்பை ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்திருந்தார்.

அதன் விளைவாக திருத்தத்தை ஆதரிக்காது சுமந்திரன், சாணக்கியன், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் வாக்களிப்பைத் தவிர்க்க ஏனையோர் அதனை ஆதரித்தார்கள். சம்பந்தன் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களுக்கு வருவதில்லை என்பதால் அவரும் வாக்களிக்க வில்லை.

இந்த விடயத்தில் கட்சியாக என்ன முடிவை




எடுப்பது என்பதை முன்கூட்டியே தீர்மானிக்கத் தான் கூட்டமைப்பின் எனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தார் என்பதையும் அவர்கள் அதைப் புறக்கணித்திருந்தார்கள் என்பதையும் சமூக ஊடகங்கள் வாயிலாகச் சுமந்திரன் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஊடகம் ஒன்றுக்கு தான் வழங்கிய நேர்காணலில் சுமந்திரனின் சொற் பேச்சைக் கேட்கப்போவதில்லை என்று ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்திருக்கிறார்கள் என்றார் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறிதரன்.

இவையெல்லாம் நடந்து முடிந்த பின்னரும் கூட்டமைப்பிற்குள் எந்தப் பிளவும் இல்லை என்று அறிக்கை விட்டார் தலைவரான சம்பந்தர். ஒருவேளை அவர் சொல்வதைப் போல கூட்டமைப்புக்குள் பிளவு இல்லாமல் இருக்கலாம், ஆனால் பிணக்கு இருக்கிறது. அதை உணர்ந்தத்தானோ என்னவோ மற்றைய தலைவர்கள் அவர் தலைமையில் நடந்த கூட்டத்தையே புறக்கணித்திருக்கிறார்கள்.

இந்த விடயம் இரண்டு விடயங்களை உறுதிப்படுத்துகின்றது. கூட்டமைப்புக்குள் புகைந்துவரும் பிரச்சினை வெறுமனே தனிமனித மோதல் அல்லது உரசல் என்கிற நிலையைத் தாண்டியது, கூர்ந்து கவனிக்கப்பட்டுத் தீர்க்கப்படவேண்டியது ஒன்று. தலைமைத்துவத்துக்கான போட்டி மற்றொன்று.

கூட்டமைப்புக்குள்ளும் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் சுமந்திரனுக்கு எதிரான அணித் திரள்வு ஒன்று இருப்பது வெளிப்படை. தமிழ் அரசுக் கட்சிக்குள் அந்த எதிர்ப்பை தன் நலன்களுக் குமாகச் சேர்த்து தலைவரே தலாட்டி, சீராட்டி வருகின்றார்.



கூட்டமைப்புக்குள் இருக்கும் எதிர்ப்பை அதன் தலைவரான சம்பந்தன் கையாளத் தவறி வருகின்றார். அது அடுத்த தலைமைக்கான போட்டியினால் ஏற்படுவது என்று தெரிந்திருந்தபோதும், "அடுத்த தலைவர் தானாகவே உருவாகி வருவார்" என்பதாக கைவிட்டு விட்டார் சம்பந்தன். அதன் விளைவுகள் காரணமாகவே கட்சியையும் கூட்டமைப்பையும் தாண்டி பிரச்சினை வெளியே வெடிக்கின்றது. அது நல்லதல்ல. தமிழ் அரசியலுக்கும் உகந்ததல்ல.

சுமந்திரனுக்கு எதிரான மற்றையவர்களின் புகைச்சல் என்பது ஆளுமை சார்ந்தது. சுமந்திரனின் அறிவு மற்றும் ஆளுமைக்கு நிகராக கட்சிக்குள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் எவருமில்லை. ஆனால், அவர் அரசியலுக்கு இடையில் அழைத்து வரப்பட்டவர். ஏனையவர்கள் நீண்ட காலமாக அரசியலில் இருப்பவர்கள். சிறிதரனைத் தவிர்த்து. தமது இளமைக் காலத்தையும் அரசியலுக்காகவே தொலைத்தவர்கள். அதனையே தமது அரசியல் தகுதியாகவும் கொண்டிருப்பவர்கள். அதனால்தான் அவர்களால், ஆளுமையுள்ளவர்களாக இருந்தபோதும் சுமந்திரனைத் தலைவராக ஏற்கமுடியவில்லை.

சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியலோடு மட்டும் நிற்காமல் சிங்களத் தேசியத்திற்கு வளைந்துகொடுக்கக் கூடியவராகவும் இருப்பாரோ என்கிற சந்தேகமும் மற்றொரு காரணம்.

ஏனைய தமிழ்த் தலைவர்களின் ஆளுமைக் குறைபாடும் செயற்றிறனின்மையும் சுமந்திரனுக்கு அரசியலில் ஒரு தன்னிச்சையான செயற்பாட்டு வெளியைக் கொடுக்கின்றது. முடிவுகளைத் தானே எடுத்துவிட்டு அதற்கு மற்றையவர்கைளை இணங்க வைக்க முடியும் என்கிற தற்றுணிபையும் கொடுக்கின்றது. அந்தத் தற்றுணிபு திமிராகத் தோற்றமளிக்கின்றது.

அவரது ஆளுமைக்கு முன் நின்று அவரை நேரடியாக எதிர்க்க முடியாத ஏனைய தலைவர்கள் அவரை அடக்கி வைப்பதன் மூலம் அல்லது வெளியேற்றுவதன் மூலம் அரசியலில் தமது தலைத்துவத்தை நிலைநிறுத்தப் பார்க்கிறார்கள்.

இதனைச் சரிவரக் கையாண்டு, கட்டுப்படுத்தி வைக்கக்கூடிய ஆளுமையும் அரசியல் திறனும் அனுபவமும் வாய்ந்தவர் சம்பந்தன். அதைச் செய்ய வேண்டிய கடப்பாடும் அவருக்கு உண்டு.

அவர்தான் சுமந்திரனை அரசியலுக்குள் கொண்டுவந்தார். சுமந்திரன் கட்சிகுள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் காத்திரமாகத் தனது ஆளுமையை நிலைப்படுத்திக் கொள்வதற்கான வெளியை உருவாக்கிக் கொடுத்தவரும் அவரே. ஆனால், தலைமைக்கான போட்டி என்று வருகின்ற போது சுமந்திரனே அதனை முட்டிமோதி எதிர்கொள்ளட்டும் என்று கைவிட்டுவிடுகின்றார்.

அதனால்தான் இப்போது



கதிரேசன் காத்தவராயன்

# வெளியிலை சொல்லேலுமோ?

சுப்பிரமணியம் மாஸ்ரர் விசாரிச்சவர் வாவன் ஒருக்காப் போட்டு வருவம் எண்டு தம்பர் கூப்பிட்டுது. சரியெண்டு போனன். அங்கை சுதனோடை நாலைஞ்சு பெடியளிருந்து வலு சீரியஸாய் கதைபட்டுக்கொண்டிருந்தாங்கள். தம்பரும் நானும் தயங்க சுதன் கண்டிட்டுக் கூப்பிட்டு இருத்தினான். மாஸ்ரரும் உள்ளுக்கையிருந்து வந்து இருந்துகொண்டார்.

'கதை வலு சூடாய் இருந்துது... குழப்பிப் போட்டம்போலை?' எண்டு நான்தான் தொடக்கினன். 'அட டட... விசயம் சூடெண்டால் கதையும் சூடாயல்லே இருக்கும்?' எண்டு மாஸ்ரர் ஒரு விதமான குரலிலை சொல்லி நிப்பாட்டினார். பெடியள் சிரிச்சாங்கள். 'எங்கடையாக்களும் நாங்களும்.. வெளியாலை கதைச்சால் எங்களுக்கல்லே மானக்கெடு?' எண்டான் சுதன். அந்த நேரம் பாத்து முருகேசர் வந்து சேந்துகொண்டார்.

'என்னடடாப்பா? உங்கடையாக்களுக்கும் உங்களுக்கும்?' எண்டு கேட்டார் முருகேசர் ஆவலாய். 'அது பெரிய கதையப்பா.. படிச்ச மனிசரெண்டு நம்புகிறவையின்ரை கதை...' எண்டு பெடியளைப் பாத்தார் மாஸ்ரர். அவங்களும் தலையாட்டினாங்கள். ஒரு பெடியன் 'உந்த ஒரு ரான்ஸரை எவ்வளவு காலமாய்த் திட்டம் போட்டும் செய்யேலாமை குழப்பியடிச்சல்லே வைச்சிருக்கிறாங்கள்?' எண்டான். விசயம் பள்ளிக்கூடத்தோடை சம்மந்தப்பட்டதெண்டது அப்பதான் விளங்கிச்சுது.

'வருசா வருசம் செய்யிற ரான்ஸரை இப்ப பாத்தியளே இப்பதான் புதிசாச் செய்யிற மாதிரி பண்ணித் துலைச்சிருக்கிறாங்கள்...' எண்டு இன்னொருத்தன் சொல்லத்தான் வீட்டிலை மருமேன் புறுபுறுத்தது பிரச்சினை வெளியே வெடிக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாவும் ஆளுமை மிக்க ஒரு தலைவராக, கூட்டமைப்பின் அடுத்த தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளக்கூடிய தயார் நிலையில் உள்ளவராகத் தன்னை வெளிப்படுத்தத் தவறிவரும் நிலையில் சுமந்திரனைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது அல்லது வெளியேற்றுவதே தமது அரசியல் எதிர்காலத்திற்கு உகந்தது என்று மற்றைய தலைவர்கள் கருதுகின்றார்கள்.

அதன் வெளிப்பாடே சம்பந்தன் தலைமையிலான கூட்டத்திற்கு சுமந்திரன் அழைப்பு விடுத்தபோது அதனை ஏனைய தலைவர்கள் புறக்கணித்த சம்பவம்.

இது எல்லா அரசியல் கட்சிகளுக்குள்ளும் நடக்கும் ஒரு பதவிப் போட்டிதானே என்று இலகுவாகக் கடந்து போய்விட முடியாது. அவர்கள் புறக்கணித்திருப்பது இலங்கை ஆட்சியாளர்களுடன் நடக்கக்கூடிய அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் கலந்துரையாடப் படவேண்டிய விடயங்கள் பற்றிய கூட்டத்தை. இந்த விடயம் இந்த நாட்டின் ஒவ்வொரு தமிழர்களையும் ஏன் முஸ்லிம்களையும் பாதிக்கக்கூடியது. லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தமது உயிர்களை ஆகுதியாக்கிய தியாகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. கட்சிக்குள்ளான வெறும் தலைமைப் போட்டி என்றால் இதனை அவர்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று வளாவிருந்து விடலாம். ஆனால், இந்தப் பிரச்சினை அந்தக் கட்டத்தைத் தாண்டி ஒவ்வொரு தமிழ் மக்களையும் பாதிக்கப் பார்க்கிறது. இதற்கு அனுமதிக்க முடியாது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இலகுவான வழி கூட்டமைப்பின் அடுத்த தலைவரை சம்பந்தன் பதவியில் இருக்கும்போதே அடையாளப்படுத்துவதுதான். தலைவர் தானாகவே உருவாகி வருவார் என்று இப்போது இருப்பதைப் போல இருந்தால் அது தமிழ் மக்களுக்குப் பேராபத்தாக அமைந்துவிடக்கூடும். முக்கியமானதொரு அரசியல் கட்டத்தில் தமிழ்த் தரப்பு பலவீனத்தை வெளிப்படுத்துவது ஏற்புடையதல்ல.

அடுத்த தலைவரை உருவாக்குவதில் தமிழகத்தின் திமுக தலைவர் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி பாணி ஒன்று உண்டு. தனது மகனை கட்சியின் அடுத்த மட்டத் தலைவர்கள் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு வளர்த்தெடுத்த பின்னரும் அவருக்கு கதிரையைத் தானே கொடுத்துவிடாமல் தனக்குப் பின்னர் அது தனது மகனுக்கு தானாகவே சென்று சேரும் நிலைமை ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பது.

கூட்டமைப்புக்குள் சுமந்திரனை அழைத்து வந்த சம்பந்தரே அதன் அடுத்த தலைமைக்கு அவரைக் கொண்டுவரும் வழிவகைகளை ஏற்பாடு செய்திருந்தால் பிரச்சினையில்லை. சுமந்திரனே போராடிக்கொள்ளட்டும் என்று அவர் கைவிட்டதால் விளைவு தமிழ் மக்களைப் பாதிக்கும் நிலையை எட்டியிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையைத் தனக்கு அடுத்த தலைவர் யார் என்பதைத் தனது கண்முன்னாலேயே அடையாளப் படுத்துவதன் மூலமே சம்பந்தன் தீர்த்துவைக்க முடியும்.

கிட்டத்தட்ட கருணாநிதி போன்றே சம்பந்தரும் உடல் நலிவுற்ற காலத்திலும் அரசியலைத் தாங்கி நிற்கவேண்டிய பொறுப்புக்குள்ளாகி இருக்கின்றார். அவரைச் சந்திக்க வருபவர்களுடன் எழுந்து நின்று படமெடுக்க முடியாத தளர்வு நிலையை அவர் அடைந்திருக்கும் இந்தக் கட்டத்தில் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் கருதி அவர் இது விடயத்தில் முக்கியமான முடிவை எடுக்கவேண்டியது அவசியம்.

ஞாபகத்துக்கு வந்துது. 'இஞ்சார் தம்பியவை நீங்கள் உங்கடை திணைக்களம் வாத்திமாரை இடம் மாத்திறதிலை இடறுப்படுகிறதையோ கதைக்கிறியள்?' என்டன் நான்.

'ஓஓ... ஓம் மாமா.. எங்கடை வலயத்திலைதான் பிரச்சனை... அதுக்குக் காரணங்கள் கனக்க..' எண்டு சுதன் தொடங்கினதைச் சொல்லி முடிக்கவிடாமல் இன்னொருத்தன் 'என்ன கனக்கக் காரணம்? முடிவெடுக்கத் தெரியேல்லை எண்டதைவிட வேறையென்ன காரணம்?' எண்டான். 'அது மட்டுமே யதார்த்தம் என்னவெண்டுமல்லே தெரியாமலுக்கு இருக்கினம்' எண்டான் இன்னொரு பெடியன்.

'என்னப்பா எனக்கொண்டுமே விளங்கேல்லை கொஞ்சம் விளக்கமாத்தான் சொல்லங்கோவன்' எண்டு கதை பிடுங்கிற ஆவலோடை முருகேசர் கேட்டார். 'அதுகாணும் முருகேசு! உந்த உத்தியோகக்காறரை குறிப்பிட்ட காலத்துக்கொருக்கா இடம் மாத்திறது வழமை. அப்பிடிச் செய்யப்போய் ஒரு கட்டமாய் தொடக்கக் கல்வி வாத்திமாரை மாத்திப் போட்டினம். இப்ப உந்த ஓஎல், ஏஎல் எண்டு படிப்பிக்கிறவையை மாத்திறதிலை தாங்களும் குழம்பி வாத்திமாரையும் குழப்பிப்போட்டு நிக்கினம்...அதுதான்' எண்டு மாஸ்ரர் நிப்பாட்டினார்.

'அப்பிடி மாத்த பட்டியல்போட்டு உரிய ஆக்களுக்கும் கடிதம் மூலம் 14ஆம் திகதி காத்திகை மாதம் நடைமுறைக்கு வரும் எண்டு அறிவிச்சவை. அதுக்குப் பிறகு அதிபர்மார் கொஞ்சப் பேர் தங்கடை அடிப்பொடியள் மாறிப்போறதை ஏற்றுக்கொள்ளாமலுக்கு அதை வெளிப்படுத்தாமல் சோதினையெழுதுற பிள்ளையள் கஸரப்படப்போகுதெண்டு கூத்துப்போட்டிருக்கினம் 'எண்டு சுதன் நிப்பாட்ட 'ஓஓஓ.... அது சரிதானே பொதுச்சோதினைக்குப் படிப்பிக்கிறவை மாத்திறத பிழைதானே?' எண்டுது தம்பர் கோவமாக.

'அது ஐயா, ஒராள் போனா அவருக்குப்பதிலாய் அதே பாடம் படிப்பிக்கிற ஒராளை நியமிச்சவை.. எல்லாரும் வாத்திமார்தானே? அவையும் தங்கடை பள்ளிக்கூடத்திலை படிப்பிச்ச ஆக்கள் தானே? பிரச்சனைவராதல்லே?' எண்டுதுதொரு பெடியன். 'அப்ப பேந்தேனப்பா அதிபர்மார் குறுக்கை நிக்கப்போனவை?' எண்டு கேட்டார் முருகேசர்.

'அது முருகேசசு அதிபர்மாருக்கு கையாய் காலாய் சிலருக்கு மூளையாயும் இருக்கிற வாத்திமாரை மாத்தினால் அதிபர்மாராலை ஒண்டுஞ் செய்யேலாதல்லே?' எண்டு மாஸ்ரர் பிலத்தாச் சிரிச்சார். 'ம்ம்ம்..உப்பிடிச் சிலதைக் கேள்விப்பட்டனான்தான்' எண்டார் முருகேசர். 'அதோடை வலயக்காறர் அதிபர்மாரைச் சமாளிக்க டிசம்பர் 19 மாத்தலாமெண்டும் சிலபேரை வாறவருசம் மே மாதம் வரைக்கும் வைச்சிருங்கோ எண்டும் சொல்லியிருக்கினம்... அதுதான் இப்ப ஆர் எங்கை போறது? எப்பபோறதெண்டு ஒரே குழப்பம்' எண்டானொரு பெடியன்.

'அப்ப முடிவெடுக்கிறது ஆர்? அதிகாரியளோ? அதிபருகளோ?' ஆர் பெரியாள்?' எண்டு தம்பர் குழப்பத்தோடை கேட்டார். 'தம்பியவை உங்களுக்கெண்டாலும் தெரியுமோ ஆர் பெரிசு? வேதாளத்துக்கு வாழ்க்கைப் பட்டிட்டியள் முருங்கையிலை ஏறப்பழகவல்லே வேணும்' எண்டுகொண்டு வந்திட்டன்.

**ஐயங்கொண்டான் சுவாமிகள்**



85

# எமையறிதல்

மனதினது ஏவலின்படியே நடந்தவை பற்றி மனமே அலசத் தொடங்குகிறது. நான் செய்தது சரியா? பிறர் என்ன நினைப்பார்கள்? போன்ற வினாக்கள் எழுவது தவிர்க்க முடியாததாகிறது. காதில் கேட்டவை, கண்களில் பட்டவை என யாவுமே மனத்தைத் தாவச்செய்கின்றன. அவற்றை இயக்குவதும்கூட மனம்தான். கண்களில் பட்டவை பட்டவையாகவே இருந்து விட மனமே தடுத்து அடுத்த விடயத்தை நோக்கித் தாவச்செய்கிறது. தாவும் கண்கள் என்ன செய்கின்றன?

கண்களைப் பொறுத்தவரை அதுவும் ஒரு உணர்வங்கம் என்பதற்கப்பால் ஏதுமில்லை. அவை ஒளியால் தூண்டப்பட்டாலும் அவ்வொளியை உணர்ந்து அதற்கேற்ப செயல்விளைவைச் செய்வது மனமே என்பதை நாம் உணரத் தவறுகிறோம் என்பதுதான் உண்மை.

கண்களில் பட்டவற்றை வகைப்படுத்துவது, ஆராய்வது, விரும்புவது, வெறுப்பது என எல்லாவற்றுக்கும் முழுப்பொறுப்பாளியாக இருப்பது மனம்தான்.

கண்ணில் பட்டதற்கெல்லாம் ஆசைப்படலாமா? என்கிற கூற்று மனதிற்கான அறிவுரையே. கண்களுக்கானதல்ல. கண்களின் பணி பார்த்ததை அறிவிப்பதுடன் நின்றுகொள்வது மட்டுமே. பகுப்பதோ ஆராய்வதோ அல்ல. ஆசைப்படுதல், வெறுப்படைதல் எல்லாம் மனதினது பணிதான். ஆசை, வெறுப்பு என்பனகூட முற்கற்பிதங்கள் அல்லது பட்டறிவின்

# மிரள்

## புது அனுபவம் தரும்



குடும்பத்துடன் சுற்றுலா செல்லும்போது, முகமுடி அணிந்த நபரால் கணவர் கொல்லப்படுவதாகக் கனவு காண்கிறார், கட்டடப் பொறியாளர் ஹரியின் (பரத்) மனைவி ரமா (வாணி போஜன்). அக்கனவுக்குப் பின் நிம்மதி இழந்து தவிக்கும் மனைவியைத் தேற்ற, சொந்த ஊருக்கு அழைத்துச் செல்கி றார் ஹரி. அங்கு குலதெய்வக் கோயிலில் வழிபாடு முடித்து ஊருக்குக் கிளம்புகிறார்கள்.

ஆள் அரவமற்ற சாலையில் கார்வரும்போது, ரமா கன வில் கண்டகாட்சிகள் அரங்கேறத் தொடங்குகின்றன. மனை வியையும் மகனையும் காப்பாற்ற ஹரி நடத்தும் போராட்ட மும் அவர்களைக் கொல்லத் துடிக்கும் முகமுடி மனிதனின் நோக்கமும் என்ன என்பதுதான் கதை.

ஹாலிவுட் திகில் பட வகையில் 'ஸ்லாஷர் த்ரில்லர்'கள் (Slasher thriller) குறைந்தபட்ச வசூலுக்குப் புகழ்பெற்றவை. காரணம், நிமிடத்துக்கு நிமிடம் பயமுறுத்தும் விதமாகக் காட்சிகளை அமைத்திருப்பார்கள். அதேபோல், அடையா ளம் தெரியாத கொலைகாரன் அல்லது சைக்கோவால் துரத் தப்படும் முதன்மைக் கதாபாத்திரங்கள், உயிரைக் காத்து கொள்ள ஓடும் ஓட்டத்தில், தங்களைப்பொருத்திக்கொள்ளும் பார்வையாளர்களின் உளவியல் அட்டகாசமாக வேலை செய்யும்.

தமிழில் ஏற்கனவே இப்படி சில படங்கள் வந்திருந்தாலும், நேர்த்தியான 'ஸ்லாஷர் த்ரில்ல'ரைக் கொடுத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் எம்.சக்திவேல்.

இதுவரையில் பரத் நடித்து வந்திருக்கும் படங்களை முற்றாக மறக்கடிக்கச் செய்து, இதில் மனைவிக்காக நிற்கும் காதல் கணவராக, ஒரு கதாபாத்திரமாக உணர வைத்து விடுகிறார். அவ்வகையில் பரத்துக்குச் சிறந்த மீள்வருகைப் படமாக அமைந்துவிட்டது. தனது வலிகளைப் புதைத்து வைத்துக்கொண்டு காத்திருக்கும் மனைவியாக, வாணி போஜனும் சிறந்த நடிப்பைக் கொடுத்திருக்கிறார்.

'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' ராஜ்குமார் நல்ல

பதிவுகள்தான். ஆனால் நாங்கள் கண்கள் வழியில் மனம் அலைவதாகவே கருதிக்கொண்டு மனத்தினது அலைவிற்காக கண்களைக் குற்றவாளியாக்கிவிட்டு இருந்துகொள்கிறோம். இது நியாயமானதா?

நாம் கொள்கிற ஆசைகளிற்காக கண்களையே கார ணமாக்குகிறோம். உண்மையதுவல்ல என்பதை இப் போது ஏற்கமுடிகிறதா? கண்டவற்றை தனது முன்கற் பிதம் அறிதல் புரிதல் என்ற அடிப்படையில் அடை யத் துடிப்பதும் உடலைத் தூண்டுவதும் மனமேதான். அதுதான் முழுமைக் காரணி. நாம் புரிந்துகொள்வ திலேயே தவறிழைக்கிறோம். இந்தப் புரிந்துகொள்ளல் என்பது முழுமையாக மனதினது பணியாகவே இருக் கிறது என்கிற யதார்த்தம் உணரப்படுவது மிகக்குறைவு அல்லது இல்லை.

கண்களை மீள மீள குறித்த ஒன்றிலேயே கவனத் தைக் குவிக்கச்செய்வதுகூட மனம்தான் என்பதை ஏற்றேயாகவேண்டியுள்ளது. அவ்வாறே வெறுப்படை யச் செய்வதுகூட மனம்தான். தான் விரும்புவதைப் பாரக்கவும் வெறுப்பதிலிருந்து பார்வையை விலக்க வும் கண்களுக்கான கட்டளையைப் பிறப்பிப்பது மனம்தான். மனமே எல்லாமாக இருந்துகொண்டு தானே கண்கள் மீது குற்றத்தையும் சுமத்திவிடுகிறது. நம்புதல் என்கிற நம்பிக்கையீனத்திலிருந்து நாம் விடுபடாதவரை இவ்வுண்மை உறைக்காது.


இவ்வாறேதான் செவிகளும் அப்பாவிகளாயிருந்து கொண்டு அவப்பெரைப் பெறுகின்றன. ஒளிக்கான தூண்டலைக் கண்கள் பெறுகின்றன. ஒலிக்கானதைச் செவிகள் பெறுகின்றன. காதில் பட்டதை காது உட னேயே மனத்திற்கு அறிவிப்பதுடன் நின்றுவிடுகிறது. அது இனிமையா? கடூரமானதா? இரைச்சலா? அவ் வொலியை வகைப்படுத்துவதும் தேவைக்கேற்ப வேறு படுத்துவதும் பகுப்பதும் ஆராய்வதும் எல்லாமும் செய்வது மனமேதான்.

இங்கும் ஆசை, விருப்பு, வெறுப்பு என எல்லாவற் றையும் தீர்மானிக்கிற வலு மனத்திற்கே உண்டு என் பதை கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. காதில் பட்டதற்கான வெளிப்படுத்துகை வாய், கண், உடல் என நிகழ்வதால் காதுதான் இவற்றிற்கெல்லாம் கார ணமெனக் கருதுவதுகூட மனதினது பதிவேதான். காதுக்கும் வெளிப்படுத்துகைக்கும் எந்தவொரு தொடர் பும் கிடையாது. ஒலிகள் மனதினது முன்கற்பிதங்கள் மற்றும் பட்டறிவுகள் வழியாவே பகுக்கவும் வேறு பிரிக்கவும்படுகின்றன. இதுவே உண்மையாக உள்ளது.

இங்கே உண்மை எது? பொய் எது? அவைகூட மனதினது வகைப்படுத்துதலே என்பதை முன்பொரு முறை பேசியிருக்கிறோம். நினைவிலிருக்குமென நம் புகிறேன். ஏற்றுக்கொள்ள விரும்புவது உண்மையாவும் ஏற்றுக்கொள்ள விரும்பாதது பொய்யாகவும் உணரப் படுகிறது. அந்த உணர்வைத் தருவதுகூட மனம்தான் என்பதில் ஐயமேதுமுள்ளதா? ஆக விரும்புகிற விட யம் உண்மையெனவும் விரும்பாதது பொய்யெனவும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு கற்பித்ததும் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதும் அதனையே பிர யோகிப்பதும் அதனையே காவித் திரிவதும் மனம் தான்.

அந்த மனம்தான் கண்களாலும் காதுகளாலும் வழிப்படுத்தப்படுவதாகவும் அலைக்கழிக்கப்படுவதா கவும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. கற்பிக்கப்பட்டது யாரால்? எவ்விதமாக இது நடந்திருக்கிறது? சிந்திப் போம்.






நடிகர் என்றபோதும், பரத்தின் நண்பர் பாத்திரத்துக்கு சுத்தமாகப் பொருந்தவில்லை. கதையில் முக்கியத்துவம் கொண்ட அவரது பாலியல் இச்சை, அழுத்தம் திருத்தமாக நிறுவப்படவில்லை. இதனால் முக்கிய திருப்பங்கள், சிறந்த திகில் நாடகமாக அமைந்தபோதிலும் அவை உப்புச் சப்பில்லாமல் நீர்த்துப் போகின்றன. கே.எஸ்.ரவிகுமார் கதாபாத்திரம் கூறும் விளக்கங்கள் தர்க்கத்துக்கு வெளியே நிற்கும் அபத்தங்கள்.

இரண்டாம் பாதியில் மலிந்திருக்கும் சிக்கல்கள் அனைத்தையும் இருளும் பளீர் ஒளியும் இணையும் நேர்கோட்டில் துலங்கும் ஒளிப்பதிவைக் கொடுத்துள்ள சுரேஷ் பாலா, கதை நகரும் உள்ளரங்கு, வெளிப்புறம் ஆகிய 2 களங்களிலும் நம்பகமான கலை இயக்கத்தைச் சாத்தியமாக்கி இருக்கும் மணிகண்டன் சீனிவாசன், கதாபாத்திரங்களின் உணர்வு நிலைகளைக் கடத்தும் இசையை வழங்கியுள்ள பிரசாத் எஸ்.என்., சிக்கலான திருப்பங்களைக் கொண்ட திரைக்கதையை குழப்பமில்லாத படத்தொகுப்பு மூலம் உள்வாங்கச் செய்யும் கலைவாணன். ஆர் ஆகியோரின் தொழில்நுட்பப் பங்களிப்பே படத்தைத் தாங்கிப்பிடிக்கிறது.

குறைகளை மீறித் துலங்கும் முதன்மைக் கதாபாத்திரங்கள், தொழில்நுட்ப பங்களிப்பு ஆகியவற்றுடன் மிரளவைக்கும் முயற்சியில் நேர்த்தியான திரை அனுபவம் தருகிறது 'மிரள்'.




# யசோதா

## கொடுக்கும் காசுக்குப் பாதிப் பயன்

ரஜினிகாந்தின் பாட்சா படம் மாதிரி அப்பாவியாக அறிமுகமாக அதிரடி அடிதடி நாயகியாக சமந்தாவை உயர்த்தும் ஒரு முயற்சியே யசோதா.

பணத்துக்காக வாடகைத் தாயாகிறார் யசோதா (சமந்தா). வயிற்றில் வளரும் குழந்தை பணக்கார வீட்டுக்குச் சொந்தமானது என்பதால், மருத்துவ வசதிகளுடன் கூடிய 'ஹைடெக்' இடத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள் அவரை. குழந்தை பிறக்கும்வரை அங்கேயே இருக்க வேண்டும் என்கிறார்கள். அங்கு அவரைப் போலவே ஏராளமான வாடகைத் தாய்கள். அந்த இடத்தில் சில விஷயங்கள் சந்தேகப்படும்படியாக நடப்பதைக் கவனிக்கிறார், யசோதா. பிறகு அவர் என்ன செய்கிறார்? அவர் யார்? அங்கு என்ன நடக்கிறது என்பது தான் படம்.

வாடகைத் தாயாகும் ஏழை பெண்கள் ஏமாற்றப்படுவதையும் அழகு சாதனப்பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்குப் பின் இருக்கும் இரக்கமற்ற வியாபாரத்தையும் அதிர்ச்சியோடு சொல்கிறது, 'யசோதா'.

ஹாலிவுட் நடிகை மற்றும் மிஸ் இந்தியா போட்டியாளரின் மர்ம இறப்புகளை ஒருபுறம் விசாரிக்கும் காவல்துறை, மறுபுறம் வாடகைத் தாய் விஷயங்களில் நடக்கும் மோசடிகள் என இரண்டு தடங்களை இணைத்துச் செல்கிறது திரைக்கதை. மாறி மாறி வரும் இந்தக் காட்சிகள், முதல் பாதி வரை பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் அதிகரிக்கின்றன. ஆனால், தர்க்க நியாயமே இல்லாத இரண்டாம் பாதி, அதைக் குபுக்கென்று குப்புறத் தள்ளி விடுவதுதான் படத்தின் ஆகப் பெரும் பலவீனம்.

சமந்தாவைத் தனி நாயகியாகத் தரமுயர்த்துவதற்காகவே உருவாக்கப்பட்ட இரண்டாம் பாதியால் படத்தின் முதல் பாதி உருவாக்கிய எதிர்பார்ப்பும் உள்ளடக்கமும்கூட தவிடுபொடியாக்கப்படுகின்றன.

மொத்தப் படத்தையும் தன் நடிப்பால், ஒற்றை ஆளாய் தாங்கிப் பிடிக்கிறார் சமந்தா.



வாடகைத் தாயாக அறிமுகமாகும் முதல் காட்சி யிலேயே, வறுமைப் பெண்ணின் குழப்பமான முகம் காட்டி 'யசோதா'வாகி விடுவதுதான் அவர் பலம். 'ஹைடெக்'இடத்தில் நடக்கும் மர்மங்கள் பற்றி சந்தேகப்படும்போதும் சக தோழி காணாமல் போனது கண்டு தவிக்கும்போதும் சின்ன சின்ன குறும்புக ளிலும் சமந்தா ரசிக்க வைக்கிறார்.

கர்ப்பிணியால் எப்படி அடிதடியில் இப்படி அதி ரடி காட்ட முடியும் என்ற கேள்வி எழுந்தாலும் திரைப்படங்களில் இதெல்லாம் ஒரு கேள்வியாக என்று புறந்தள்ளிவிடவேண்டும். மற்றும்படி அவரு டைய உழைப்பு வியக்க வைக்கிறது.

பண ஆசை பிடித்தவராக வரலட்சுமி சரத்குமார், அழகாய் மிடுக்காய் இருக்கிறார். அவரது உயரமும் உடல் வாகுவும் இந்தப் பாத்திரத்திற்கு நன்கு பெருந்திப் போகின்றன. சாதாரணமாக நடித்துவிட் டுப் போகிறார். ஆனால், அவருடைய பின்னணிக் கதையில் காட்சியில் வரும், அவர் கதாபாத்திர வடிவமைப்பில், திணிக்கப்பட்ட செயற்கைத்தனம் அப்பட்டமாகத் தெரிகிறது. கண்மூடித்தனமான 'மூளைக்கார' காதலனாகவும் அந்தக் காதலையே வியாபாரக் கூட்டாளிகளைப் பிடிக்கவும் மாற்றி விடுகிற பாத்திரம் உன்னி முகுந்தனுக்கு. நம்ப வைக் கிறார்.

சம்பத் ராஜ், காவல் அதிகாரி முரளி சர்மா, அமைச் சர் ராவ் ரமேஷ் ஆகியோரும் தங்கள் பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார்கள். மணிசர்மாவின் பாடல்களும் பின்னணி இசையும் கதைக்கு உயிர் கொடுக்கின்றன. சுகுமாரின் ஒளிப்பதிவில் சமந்தா வின் அடிதடிக் காட்சிகள் ஆவேசம் கொள்கின்றன. முதல் பாதி திரைக்கதைக்கு கொடுத்த மெனக் கெடலை இரண்டாம் பாதிக்கும் கொடுத்திருந்தால், 'யசோதா' இன்னும் ஈர்த்திருப்பாள்.

---

## இந்திய...

நிலையில் டோவலின் பயணம் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் கடனை எதிர்பார்த்துள்ளது. அதனைப் பெறுவதற்கான அதிகாரிகள் மட்ட இணக்கம் எட்டப்பட்டுவிட்டபோதிலும், இலங்கைக்கு நேரடியாகக் கடனளித்த நாடுகள் அத னைத் திரும்பச் செலுத்துவதற்கான வகைகளை மறுசீர மைப்புச் செய்யும் வரையும் நாணய நிதியத்தின் கடன் கிடைப்பது தாமதமாகும். எனினும் இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகியன கடன் மறுசீரமைப்புத் தொடர் பில் இன்னும் தெளிவான முடிவுகளைத் தெரிவிக்கவில்லை. இலங்கையுடனான சீனாவின் நெருக்கம் தொடர்பில் இந்தியாவிற்கு அதிருப்திகள் இருக்கும் நிலையில் இலங் கையின் தற்போதைய நெருக்கடி நிலையை அது தனக் குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முனையும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

கடன் மறுசீரமைப்புக்காக இந்தியாவின் பதிலை இலங்கை எதிர்பார்த்திருக்கும் நிலையில் புதிய அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய தலைமை அமைச் சர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு இது வரையில் இடம்பெற வாய்ப்பளிக்கப்படாததும் அரசி யல் அவதானிகளால் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

ரணிலுக்கும் மோடிக்கும் இடையே சந்திப்பை ஏற்பாடு செய்வதற்குப் பல தரப்புகள் ஊடாகவும் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. இந்தப் பின்னணியிலேயே தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திடீரென கொழும்புக்கு வந்துள்ளார்.

அஜித் டோவலின் மகன் சௌர்ய டோவல் கடந்த வாரம் தனிப்பட்ட பயணமாக இலங்கைக்கு வந்திருந்தார், இதனை அறிந்த ரணில், அவரை அழைத்து நேரில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அதன் பின்னரே தேசிய பாது காப்பு ஆலோசகரின் பயணம் திட்டமிடப்பட்டதாகவும் தெரிகிறது.

---

## தனுஸ்கவை...

தளம் மூலம் அறிமுகமான பெண்ணுடன் அவர் அனும திக்காத வகையில் உடலுறவு வைத்துக்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டார். விசாரணைக ளுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அவ ருக்கு வியாழக்கிழமை நீதிமன்றம் பிணை வழங்கியது.

ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர் பிணைத் தொகைக்கான உத்தரவாதத்தை இலங்கை அரசு மற்றும் இலங்கை கிரிக்கெட் சபை ஆகியன தருவதாக நீதிமன்றத் திற்குத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனுஸ்கவிற்கு நீதிமன்றம் பிணை வழங்கியது.

அவரைப் பிணை எடுப்பதற்கான நீதிமன்ற நடவடிக்கைக ளுக்கு மட்டும் 38 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்கள் இலங்கைக் கிரிக்கெட் சபையால் செலவிடப்பட்டுள்ளதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால், அந்தத் தொகையை தனுஸ்கவின் சட்டவாளர் ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கையர்களிடம் இருந்து திட்டிப்பெற முடியும் என்று நம்புகிறார் என இலங்கை கிரிக்கெட் சபையின் உதவிச் செயலாளர் கிரியந்த கப்புவட்ட தெரிவித்தார்.

கடுமையான நிபந்தனைகளின் கீழேயே தனுஸ்கவிற்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. வழக்கு முடியும் வரை அவர் ஆஸ்திரேலியாவைவிட்டு வெளியேறக்கூடாது. அதேநேரம் இணைதேடும் தளங்கள் உள்ளிட்ட எந்த சமூக வலைத்தளத்தையும் பயன்படுத்தக்கூடாது என்ப தும் அவற்றில் சில நிபந்தனைகள்.

# ஏன்...?

# அப்படி...?

நட்சத்திரா

38



# மனைவி கர்ப்பமுற்றிருக்கும்போது கணவர் தாடி வளர்ப்பதன் பின்னணி

மனைவி கர்ப்பமுற்றிருக்கும்போது கணவர்கள் பலர் தாடி வளர்ப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் தற்போதும் இந்த நிலை காணப்படுகிறது. ஏன் இவ்வாறு தாடி வளர்க்கிறீர்கள் என்று கேட்டால் அதற்கான தகுந்த பதில் அவர்களிடம் இருப்பதில்லை. அது அப்படித்தான் என்று முடித்துவிடுகின்றனர். தாடி விடயத்தில் ஊகங்களே அதிகம் உள்ளன. இதற்குப் பின்னால் ஒரு சில காரணங்கள் ஏற்கத்தக்கவையாகப் பழங்காலத்தில் இருந்துள்ளன. ஆனால் தற்காலத்திலோ எவ்வித காரண காரியங்களும் இன்றித் தாடி வளர்க்கிறார்கள்.

அந்தக் காலத்தில் தனிநபர் தானே சவரம் செய்து கொள்ளக்கூடிய உபகரணங்கள் இருந்ததில்லை. வேறொருவர் சவரம் செய்துவிடும்போது ஏதாவது தகராறுகள், முறுகல்கள், பழிவாங்கல்கள் காரணமாகக் கத்தியால் கழுத்தை வெட்டிக் கொலை செய்யும் வாய்ப்பு இருந்திருக்கக்கூடும். மனைவி கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் தாடியை நீக்கும்பொருட்டுக் கணவன் சவரம் செய்யும் சந்தர்ப்பத்தில் கொல்லப்பட்டால் அது பேரிழப்பைக் கொடுக்கும் என்பதால் அந்தப் பருவ காலத்தில் சவரம் செய்வதைத் தவிர்த்திருக்கக்கூடும்.

திருமணமானவர் தாடியுடன் இருந்தால் அவரது மனைவி கர்ப்பமாக இருக்கிறாள் என்பதை மற்றவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்பதற்கிணங்க ஓர் அடையாளமாகத் தாடி வளர்ப்பு இருந்திருக்கலாம். இதனால் அந்த நபரை உயரமான இடத்தில் ஏற்றி வேலை செய்விப்பதைத் தவிர்ப்பதுடன் ஆபத்து நிறைந்த வேலைகளை அவருக்கு வழங்காது தவிர்க்கும் வழக்கமும் இருந்திருக்கலாம்.

அதேபோல வயல் வேலை மற்றும் இதர வேலைகளில் இருந்து ஏனையவர்கள் வீடு செல்வதற்கு முன்பாகவே அவரை வீட்டுக்குச் செல்லுமாறு அனுப்பி வைக்கும் பழக்கமும் இருந்திருக்கலாம்.

மனைவி கர்ப்பமாக இருப்பதைத் தாடி மூலம் அடையாளமாகக் காட்டும்போது உறவுக்காரர், நண்பர்கள் கர்ப்பவதி ஆசைப்படும் உணவுகளையும் ஆரோக்கிய உணவுகளையும் வழங்கிக் கர்ப்பவதியின் ஆரோக்கியத்துக்கு உதவும் பண்பாடு நிலவியிருக்கலாம்.

கர்ப்ப காலத்தில் கணவர் தாடி வழித்துக் கவர்ச்சியாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வேறு பெண்கள் நாடி

விட வாய்ப்பிருக்கும் என்பதால் தாடி வளர்த்திருந்தால் கவர்ச்சியாக இருக்காது என்ற உள் நோக்கமும் இருந்திருக்கலாம் (தற்காலத்தில் தாடியும் கவர்ச்சியாகிவிட்டது வேறு கதை).

மனைவி கர்ப்பமாக இருக்கும் போது தாடி வளர்த்துக் கொள்வது ஒரு நடைமுறையாக இருந்தமைக்கு இவ்வாறாகப் பல காரணங்கள் அன்றைய காலத்தில் இருந்திருக்கலாம். ஆனால் தற்போது காலம் மாறிவிட்ட போதிலும் மனிதர்கள் சிலர் அவ்வாறே இருக்கிறார்கள். ஏன், அப்படி என்று தெரியாமல்கூடத் தாடி வளர்க்கிறார்கள். தற்போது திருமணம் செய்யும்போதே தாடியுடன் தாலி கட்டுகிறார்கள். பெண் கர்ப்பதிவாயாக இருக்கும்போது தாடி வளர்க்காது இருப்பதும் நடைமுறையாக உள்ளது. ஆகையால் இன்றெல்லாம் தாடியை வைத்து எதையும் தீர்மானிக்க முடியாத சூழலும் நிலவுகிறது.

இடைக்காலத்தில் காதலில் தோற்ற ஆண்களும், திருமணமாகாத ஆண்களும் கவலையில் தாடியுடன் திரிந்தார்கள். தற்போது அந்த நிலை மாறித் திருமணம் செய்யாத, காதலிக்காத இளைஞர்கள் பலரும்கூடத் தாடியுடன்தான் திரிகிறார்கள்....!

# ஃபின்லாந்து பள்ளி உணவு: எதிர்காலத்துக்கான முதலீடு

05

ஃபின்லாந்துக் கல்வித் துறையினை நாம் முழுமையாகப் புரிந்துக்கொள்ள, மூன்று அடிப்படைகளை அவசியம் தெரிந்துக்கொள்ளவேண்டும். அவை தாய் மொழி வழிக் கல்வி, சமூக நீதி - சமூக நலத் திட்டங்கள், அதிகாரப் பரவலாக்கம் ஆகும்.

1947களின் காலக்கட்டத்தில்தான் ஃபின்லாந்தும் தன்னு டைய பள்ளிக்கல்விக்கான நவீன படிநிலையை எடுத்துவைத்தது எனலாம். பொதுவுடமைக் கட்சி, 1944இல் ஆட்சிக்கு வந்த பிறகு, 'ஃபின்லாந்துக் கல்வித் துறையின் வழியாக மட்டுமே ஃபின்லாந்தின் சமத்துவச் சமூகத்தைப் படைக்க முடியும்' என அறிவிக்கிறார்கள். 1948இல், பொதுவுடமைக் கட்சி (49 இடங்களும்), சமத்துவ ஜனநாயகக் கட்சி (50 இடங்களும்) வேளாண்மையக் கட்சி (49 இடங்களும்) பெற்றுக் கூட்டணி ஆட்சி அமைக்கின்றனர்.

இதுவே, ஃபின்லாந்து நாட்டின் மறுக்கட்டமைப்புக்கான காலமாக மறுமலர்ச்சி பெற்றது. அதன் முக்கிய அங்கமாக, ஃபின்லாந்து நாட்டின் எவ்விதமான சீர்த்திருத்தங்களுக்கும் பொதுவான அரசியல் இணக்கப்பாடு / கருத்திசைவு (political consensus) தேவை என வரையறுத்தார்கள். 1950க்கு பிறகு மரபியக் கட்சியும் ஃபின்லாந்தின் நான்காவது பெரிய கட்சியாக களத்தில் இணைந்தாலும், கல்வி - அரசியல் இணக்கம் - சமூக மேம்பாடு ஆகியவற்றில் மாற்றங்கள் நிகழவில்லை. ஃபின்லாந்துக் கல்வித் துறையின் சீர்த்திருத்தங்களில் ஒன்றாக, இந்தக் கால கட்டங்களில் அமைக்கப்பட்ட அரசியல் கல்விக் குழுவும் (political education committee) சுட்டிக்காட்டப்படுகிறது.



**இந்தக் குழுவின் மிக முக்கியமான வழிகாட்டல்கள்:**

7 முதல் -16 வயதினருக்கான இலவச பரவலாக்கக் / விரிவாக்கக் கல்வி (Free Comprehensive school) என்பதாகும். ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவந்த இலக்கணக் கல்வி மற்றும் சமூகவியல் பள்ளிகள் வகையான கல்வித் திட்டங்கள் கைவிடப்பட்டன.

கல்வித் துறையில் மைய அரசின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு முற்றிலுமாக உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தின் நேரடியான அதிகாரத்திற்கும் ஆசிரியர்களின் சுதந்திரச் செயற்பாடுகளுக்கும் என மாற்றங்கள் நடந்தேறின.

**உணவுத் திட்டம்**

ஃபின்லாந்துக் கல்வித் துறையின் வெற்றிக் கதைகளை எழுதுவோர் சுட்டும் முக்கியமான விஷயங்களில் ஒன்று, ஃபின்லாந்து 1948இல்

அறிமுகப்படுத்திய மதிய உணவுத் திட்டம். 70 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தப்படும் உணவுத் திட்டம் இது.

இதனை 'உணவு, பசியாறுதல் என்ற அளவுகோலில் மட்டுமே மதிப்பிட முடியாது. குழுவாக இணைந்து ஒரே அளவுகோலில் பகிர்ந்து உண்பது, சமூக நல்லிணக்கம், பொதுச் சமூகக் கலந்துரையாடல், பள்ளியில் கடைப்பிடிக்கப்படும் நேரம் தவறாமை, முறையாக உண்ணுதல் எனப் பல விடயங்கள் இதன் பின்னணியில் உள்ளன. அதேபோல, 'மதிய உணவு நேரத்தில் குழந்தைகளிடையே நடத்தப்படும் உரையாடல்களினால் தகவல் பரிமாற்றும் திறன் மேம்பாடு அடைந்து, பொது அறிவு விரிவடைகிறது' என்றும் சொல்கின்றனர்.

ஃபின்லாந்துக் கல்வித் துறையின் பிரபலமான வாசகங்களில் ஒன்று, 'பள்ளியில் வழங்கப்படும் உணவு சமூகச் சமவத்துவத்துக்கும் எதிர்காலத்துக்குமான முதலீடு. இதன் வழியாகவே பல்வேறு சமூகப் பின்னணியில் இருந்து வரும் குழந்தைகள் சமத்துவமான வாய்ப்பினை பெற்று சமூக நல்லிணக்கத்தை அடைகின்றனர்!'

ஃபின்லாந்து பள்ளிகளில் உணவு இடைவேளை 1 மணி நேரத்திற்குக் குறையாமல் இருக்கும். மாணவ, மாணவியர்கள் தங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளாக, சமைப்பது, உணவை வீணாக்காமல் இருப்பது, வீட்டு உணவுப் பொருளாதாரம் தொடர்பான அறிவினைப் பெறுவது, சூழலியல் சார்ந்தப் பார்வைகளைக் கற்பது, உடல்நலன், பல்வேறு சமூக மக்களின் உணவுப் பண்பாட்டினைப் பற்றி அறிவது என உணவு சார்ந்த கல்வி ஃபின்லாந்து உள்ளிட்ட நாடுகளில் மிகப் பிரபலமானவை.

ஒவ்வொரு நகராட்சியும், மாநகராட்சியும் பள்ளிகளில் வழங்கப்படும் உணவின் தரம், சமமான ஊட்டச்சத்து கிடைக்கிறதா என்பதைக் கண்காணித்து காலத்திற்கும் பிராந்தியச் சூழலுக்கும் ஏற்ற மாறுதல்களை உள்ளடக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

உலகளவில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இத்தகைய உணவுத் திட்டத்தின் வேறு சில அம்சங்களை நாம் புரிந்துகொள்ளவும் உதவுகின்றன.

உலக அளவில், பள்ளிகளில் உணவு வழங்குவதற்கான ஐக்கிய நாடுகள் சபையும், 'யுனிசெப்' (UNICEF) நிறுவனமும் சுட்டிக்காட்டிய பல ஆய்வறிக்கைகளில், '1) மாணவ, மாணவிகள் இடைநிற்றல் தடுக்கப்படும், 2) நல்ல ஊட்டச்சத்து நிறைந்த உணவு, மாணவ, மாணவியரின் ஆரோக்கியத்தைப் பேணுவதோடு, கல்விக் கற்றலில் திறன் மேம்பாடு அடையும், 3) சமூக ஏற்றத் தாழ்வுகள் அற்ற வகுப்பறைகள் உருவாகும், அதனால் சமத்துவ வகுப்பறைக்கு வித்திடும்' என்பதைத் தொடர்ந்து சுட்டிக்காட்டுகின்றனர்.



முக்கியமாக இந்த உணவுத் திட்டமானது, சமூக நலத் திட்டங்களின் முக்கியத்துவத்தை இளம் பருவத்திலேயே உணர்த்திவிடுகிறது. இது ஒவ்வொரு தளத்திலும் சமூக நலத் திட்டங்களின் தேவையைச் சமூகத்திடம் உணர்த்துகிறது. உலகில் சமூக நலத் திட்டங்களின் முன்னோடியாகவும் எப்படி ஃபின்லாந்து திகழ்கிறது என்பதற்கான சூட்சமம் இங்கே தொடங்குகிறது!



சிறைக்குள்...

83

தர்மராசா

# நிபந்தனைகளுடன் போராட்டத்தை நிறுத்தினோம்

தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் என 20க்கு மேற்பட்டோர் களுத்துறைச் சிறைச்சாலைக்கு வருகை தந்தனர். தமது நிலைப்பாட்டை வெளியுலகுக்கு அறிவிப்பதற்குக் கைதிகளைப் பொறுத்தவரையில் அது ஒரு நல்ல சந்தர்ப்பாமாக அமைந்தது. அங்கு வந்திருந்த டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன உரையாற்றியபோது, கைதிகளின் விடுதலையில் நான் முடிந்தளவு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறேன். நான் வேறு ஒரு அமைச்சைச் சேர்ந்தவனாக இருந்தபோதும் சட்ட மா அதிபர் திணைக்களத்தையும் கைதிகளையும் சந்திக்கும் ஒழுங்கைச் செய்துள்ளேன். எனவே இவற்றை முடிவுக்குக் கொண்டுவர மேலும் சில மாதங்கள் எடுக்கும் எனக்கு இன்னும் 3 மாத காலத் தவணை தாருங்கள் - என்று கைதிகளிடம் கேட்டுக்கொண்டார். அதைக் கைதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

"நான் மட்டும்தான் சிங்கள அமைச்சராக இருந்துகொண்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் அக்கறை செலுத்தி வருகிறேன்" - என்றும் ஜெயலத் ஜெயவர்த்தன சொன்னார். அதன் பின்னர் வாதப் பிரதிவாதம் எழுந்தது. இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு, அமைச்சர் என்றால் அனைவருக்கும் அமைச்சர்தான் சிங்கள அமைச்சர் என்று பேசத் தேவையில்லை. இவருடன் கதைக்க என்ன இருக்கிறது. நாம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடருவோம் என்று கூறிக் கைதிகளில் ஒரு பகுதியினர் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்து எழுந்துவிட்டனர்.

மீண்டும் நீண்ட நேரம் சமரச முயற்சிகளில் இறங்கி ஒருவாறாக டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன முன்வைத்த 3 மாத காலப்பகுதியை ஏற்பது என்ற முடிவுக்கு வர வேண்டியிருந்தது. அதற்குக் காரணம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கைதிகளில் 10 பேருக்கு மேற்பட்டவர்களின் உடல்நிலை அதிகம் பாதிக்கப்பட்டிருந்தது. அவர்களில் யாராவது இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு ஏனைய கைதிகளால் என்ன செய்ய முடியும் என்பது எம்மை நாமே கேட்டுக்கொண்ட கேள்வியாக இருந்தது.

இதைவிட அந்தக் காலக்கெடுவை ஏற்றுக்கொள்ள ஒரு தொகுதியினர் தயாராக இருந்தார்கள். இதனால் கைதிகள் இரண்டுபடுவர். இரு கூறுகளாகி நிலமையை

மோசமாக்குவதை விட அவர்களின் நிபந்தனைகளுடன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நிறுத்துவது என்கிற முடிவே சிறைச்சாலையின் உட்சூழலைப் பொறுத்தவரை கௌரவமான பின்வாங்கலாக இருந்தது.

'பி' பிரிவுக் கூரை மீது ஏறியிருந்தவர்களிடம் போராட்டத்தைக் கைவிடுமாறு கூட்டத்தில் கலந்துகொண்ட கைதிகள் கேட்டபோது அவர்கள் மறுத்துவிட்டார்கள். அவர்களுடனேயே கூரையில் இருந்துவிட்டு அமைச்சர் வருவதற்குச் சற்று முன்னர்தான் நானும் சேரனும் கீழே இறங்கியிருந்தோம். பின்னர் நாம் இருவரும் கூரையில் இருந்தவர்களுடன் கதைத்து ஏனைய கைதிகளைச் சம்மதிக்கச் செய்தோம்.

போராட்டத்தைத் தொடர வேண்டும் என்று அடம்பிடித்தவர்களில் ஒரு சிலரின் மனநிலையானது, வேறு யாராவது சாகட்டும் என்பதாக இருந்தது. அடக்கு முறைக்குள் இருக்கும் எல்லாக் கைதிகளுக்கும் விடுதலை பற்றிய எதிர்பார்ப்பு இருந்தது. அவர்களின் குடும்பங்களின் ஏக்கம் என்கிற இன்னோர் பக்கமும் உண்டு. இந்த நிலையில் கைதி ஒவரின் இறப்பு தவிர்க்கப்படவேண்டும், உணவு தவிர்ப்புப் போராட்டமானது ஓர் அறவழிப் போராட்டம், அதில் வன்முறையைக் கலக்கக்கூடாது என்பது பலருக்குப் புரியாமல் இருந்தது.

உதவி சட்ட மா அதிபர் தியான்சி அரசகுலரத்ன உரையாற்றிய போது அவரது உரையிலிருந்து ஒரு விடயத்தைத் தெளிவாக உணர முடிந்தது. அலுமாரி ஒன்றுக்குள் உடுப்பை வைத்து எடுப்பதுபோல உங்கள் மீது தொடுத்திருக்கும் வழக்கை இலகுவாகத் திரும்பப் பெற்றுவிட முடியாது. வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தி நீதிமன்ற விசாரணைகளூடாக உங்களை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளை சட்ட மா அதிபர் திணைக்களமே எடுக்க முடியும். அதற்குக் குறைபட்சம் 3 மாதங்களாவது கால அவகாசம் தேவைப்படும் - என்றார்.

(தொடரும்)

# புலிகளின் சங்கேத உரையாடலை ஒட்டுக் கேட்டேன்

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்த் தந்தைக்கும் நித்தம்புவ பகுதியைச் சேர்ந்த தாய்க்கும் மகனாகப் பிறந்தவர் நடராஜா மகேந்திர ராஜா. தனது தொடக்கக் கல்வியை நித்தம்புவ புனித அந்தோனியார் கல்லூரியிலும் 8, 9ஆம் தரங்களைத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் பின்னர் நித்தம்புவவிலும் கற்றவர். 1976இல் தனது 21 ஆவது வயதில் இலங்கைக் கடற்படையின் தொலைத் தொடர்புப் பிரிவில் வேலைக்குச் சேர்ந்தார்.



திருகோணமலை, கொழும்பு, புத்தளம் - கற்பிட்டி கடற்படை முகாம்களிலும், கடற்படைக் கப்பல்களிலும் தகவல் அறியும் மையங்களிலும் பணியாற்றினார். புலிகளின் சங்கேத உரையாடல்களை ஒட்டுக்கேட்டு அவற்றின் உள்ளார்ந்தத்தைக் கடற்படைத் தலைமையகத்துக்கு உடனுக்குடன் அனுப்பியவர். இவர் தனது அனுபவங்களை வனச யூரியூப் தளத்தில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

நான் பாடசாலைக் கல்வியை நித்தம்புவ புனித அந்தோனியார் கல்லூரியில் முடித்து 1976இல் எனது 21ஆவது வயதில் இலங்கைக் கடற்படையின் தொடர்பாடல் பிரிவில் பணிக்குச் சேர்ந்தேன். நான் அந்தப் பிரிவில் பணியாற்றினாலும் கடற்படைக்கான ஆயுதப் பயிற்சியையும் பெற்றிருந்தேன். பயிற்சி முடிந்ததும் திருகோணமலை, கற்பிட்டி, கொழும்பு - கொச்சிக்கடைக் கடற்படைத் தளங்களில் பணியாற்றினேன். எனது முக்கிய பணியாகத் தொலைத்தொடர்புக் கருவிகளூடாக ஒட்டுக்கேட்பதும் அதைக் கடற்படைத் தலைமையகத்துக்கு அனுப்புவதும் இருந்தது.

**சங்கேத மொழிப் பயிற்சி**

சங்கேத மொழியில் பேசுவதை (கோட் சிஸ்ரம்) அறிவதற்கும் முக்கிய தகவல்களைச் சங்கேத மொழி மூலம் அறிவிக்கவும் எனக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. 1983இல் "ஜயசாகர" என்ற கப்பலில் தொலைத் தொடர்புப் பகுதியில் பணியாற்றினேன். எனக்குப் பொறுப்பாகக் கொமாண்டர் விக்னேசியஸ் ஜெயவர்த்தன என்பவர் இருந்தார். அந்தக் கப்பல் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோது கப்பலில் உள்ள தொலைத் தொடர்புக் கருவியில் ஒலிக்கின்ற பல்வேறு உரையாடல்களையும் கேட்டுக் கொண்டிருந்தேன். அதன்போது ஒரு வாரத்தின் பின்னர் தமிழில்

# பெண் விரும்பாத ஆணால் ஆபத்து...!



மாதவி ராஜரட்ணம்

இயற்கை எவ்வளவு மகத்துவமானது...? அதில் உள்ள ஆச்சரியங்கள் எத்தனை கோடி...? இயற்கையைப் புரிந்துகொள்ள முடியாமல், அதன் அபாரத் திறமையை உணர்ந்துகொள்ள முடியாமல் கடவுள் என்றும் ஆண்டவர் என்றும் இறைவன் என்றும் இன்னுமுள்ள உயர் பதவிகளை அதற்கு வழங்கித் திருப்தியற்றிருக்கிறார்கள் மனிதர்கள்.

அதிலும் சிலர் இயற்கையை மீறியும், இயற்கைக்கு அப்பாற்பட்டும் செயற்படுகிறார்கள். சிலர் இயற்கைக்கு முரணாக வாழ்ந்துமுடிக்கிறார்கள். அவரவர் மகிழ்ச்சிக்கு ஏற்ப இயற்கையை அணுகுவதும், மீறுவதும், இசைவதுமாக மனித வாழ்வு கழிகிறது.

ஆணும் பெண்ணும் இணைந்துதான் புதிய உயிரை உருவாக்க முடியும் என்பது இயற்கை நியதி. அதை மாற்றியமைக்க முடியாவிட்டாலும் ஆணும் ஆணும் இணைகிறார்கள். பெண்ணும் பெண்ணும் இணைகிறார்கள். என்ன செய்தாலும் இயற்கையை விஞ்ச முடியாமல் தமக்குக் குழந்தை வேண்டு மாகில் ஆணும் பெண்ணும் இணைந்தே அதைச் சாத்தியப்படுத்துகிறார்கள். இயற்கையிடம் தஞ்சமடைகிறார்கள். இதுதான் இன்றைய மனிதர்களின் நிலை.

ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து முடிக்கவேண்டியவர்கள், அவரவர் விருப்புக்கு ஏற்ப வாழ்வதும் அந்த வாழ்க்கை மற்றவர்களைப் பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொள்வதுமே இங்கு முக்கியமானது. அதைவிட முக்கியமானதாக மனிதர்களுக்கு இருப்பது ஒருவரை ஒருவர் புரிந்து செயலாற்றுவது. இதுதான் மனிதர்களுக்குப் பெரும் சிக்கலான விடயமாக இருக்கிறது. இதனால் ஆண், பெண் பேதமின்றிப் புரிதலுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. அதன் பின்னர் வாழ்க்கையை மகிழ்வானதாகக் கழிக்கிறார்கள். இயற்கை நியதிக்கு ஏற்ப குழந்தை ஒன்றைப் பெற வேண்டும் எனும் கட்டாயமில்லாதவர்களும் பலருள்ளனர். இவ்வாறிருக்கையில் இயற்கைக்கு இசைவாக, படைப்புக்கு முரணில்லாமல் ஆணும் பெண்ணும் இணைந்தும்கூடக் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலையை என்னவென்பது...? இங்குதான் நாம் இயற்கையை இன்னும் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது...!

யாரோ உரையாடுவது கேட்டது. அதில் "சாளி சாளி" என அழைத்து ஒரு குரல் தொடர்பை ஏற்படுத்தும். அது எமது கருவியில் 69.50கி லோகேற்ஸ் அலைவரிசையில் கேட்டது. இது உரையாடல்களாக இருந்தாலும் அவர்களின் ஒருபக்க உரையாடல் மாத்திரமே எமது கருவியில் கேட்டது. பதில் கூறுவதை எமது கருவியில் கேட்க முடிவதில்லை. அவர்கள் பதில் கூறுவதற்கு வெறொரு கருவியைப் பயன்படுத்துகிறார்கள் என்று ஊகித்துக்கொண்டேன். அவ்வாறு ஒரு பக்க உரையாடலைத் தகவல் தொடர்பு விடயத்தில் சிம்ளைக் முறை என்று அழைப்பர். இதையே புலிகள் கையாண்டார்கள்.

புலிகளின் பதில் அறிவிப்பை இன்னோர் கருவியூடாக அறியும் பொறிமுறையை நான் உருவாக்கினேன். அவர்களின் உரையாடலைக் கேட்கத் தொடங்கிய 10 நாள்களின் அவர்களின் பதிலளிக்கும் அலைவரிசையைக் கண்டுபிடித்தேன். அந்தப் பதில்கள் 60905 மற்றும் 61515 கிலோகேற்ஸ் அலைவரிசைகளில் கேட்க முடிந்தது. பின்னர் முழுமையான உரையாடலைக் கேட்டு அறிக்கை தயாரித்து அனுப்பினேன். மிக முக்கியமான தகவல்களைத் தொடர்பாடல் கருவியூடாக அனுப்பினால் அதைப் புலிகள் ஒட்டுக்கேட்க வாய்ப்புண்டு என்பதால் நான் நேரடியாகச் சென்று விடயத்தைத் தெரிவிக்கவேண்டியிருந்தது.

**2 மணிநேர இடைவெளியில் கருவிகளை இயக்கினார்கள்**

புலிகளின் கருவியை ஒட்டுக்கேட்கத் தொடங்கியதும் 2 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை தமது கருவிகளை இயக்கி சாளி சாளி என அழைப்பை ஏற்படுத்துவார்கள் என்பது தெரிந்தது. ஏதாவது செய்தியுண்டா என மறுபுறத்தில் கேட்கப்படும். செய்திகள் ஏதாவது இருந்தால் கதைப்பார்கள். இல்லாவிட்டால் உடனேயே கருவியின் செயற்பாட்டை நிறுத்திவிடுவார்கள். ஆனால் நாங்கள் எமது கருவிகளை இயங்கு நிலையிலேயே வைத்திருப்போம்.

ஒரு தடவை எமது கப்பல் அதிகாலை 4 மணிக்கு திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட ஆயத்தமானது. அப்போது புலிகளின் தொலைத் தொடர்புக் கருவி இயங்கியது. ஆனால் உடன் நிறுத்தப்பட்டது. ஏதோ முக்கிய தகவல் ஒன்றைப் புலிகள் பரிமாற நினைப்பது தெரிகிறது கொஞ்சம் தாமதித்துப் புறப்படுவோம் என்று மேலதிகாரிக்குக் கூறினேன். அதன்படி கப்பல் புறப்படவில்லை.


**சாவகச்சேரி காவல் நிலையம் தாக்கப்பட்டமை**

பின்பொரு தடவை புலிகள் தொடர்பெடுத்தபோது சாவகச்சேரி காவல்நிலையத்தை அடித்துவிட்டோம் புது அம்மோ என்று கத்திக்கொண்டு ஓடினார்கள். காவல் நிலையத்தை முற்றாக அழித்துவிட்டோம் என்றும் கூறப்பட்டது. அதை உடனேயே கடற்படைத் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தினேன். அன்று நான் அனுப்பிய செய்தியால்தான் அப்படியொரு தாக்குதல் நடந்த விடயமே கொழும்புக்குத் தெரியவந்தது. அதன் பின்னர் எனது தகவலுக்காக எப்போதும் காத்திருப்பார்கள். (தொடரும்)

நுணுகி அணுக வேண்டியிருக்கிறது. இயற்கையுடன் இறுக ஒன்றிக்கவேண்டியிருக்கிறது...! அது இயற்கையின் பின்னால் புதைந்துகிடக்கிற பெரும் இரகசியமாகக்கூட இருக்கலாம்.

**இயற்கை பொய்ப்பதில்லையா...?**

எதிர்காலத்தில் குழந்தை ஒன்றை உருவாக்க முடியாத நீங்கள் வாழ்ந்து என்ன பயன்? என்று ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணுமாக இணையும் இணைகளைக் கேட் கும்போது, ஏன் ஆணும் பெண்ணும் இணைந்தும் குழந்தையின்மையால் அவதிப்படும் நிலையில்லையா? இயற்கை பொய்த்துப்போவதும் நடக்கின்றது தானே... ஆணும் பெண்ணும் இணைந்தும்கூடக் குழந்தையில்லாமல் இருப்பவர்கள் உள்ளனர் தானே என்று தமது நிலைப்பாட் டுக்குப் பலம் சேர்ப்பார்கள். அதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், அதில் பொய்யும் உள்ளது...! இதுவரை யாருமே கவனிக்காத பக்கம் அது.




**ஆபத்தான ஆண்கள்...!**

"மெல்லிய ஆண்மகனைப் பெண்ணுக்குப் பிடிக்காது" என்பது தென்னிந்தியத் திரைப்படமான அமர்க்களத்தில் வைரமுத்து எழுதிய பாடல் வரி. பெண்கள் விரும்பாத ஆனால், அவர்களின் வாழ்க்கைத் துணையாக அமைந்து விடுகிற ஆண்களால் குழந்தை உருவாகும் நிலை தடுக் கப்படும் என்கிறது புதிய ஆய்வு ஒன்று. ஆண் - பெண் உடலால் இணையும்போது ஆண் கோடிக்கணக்கான விந்தணுக்களை வெளியேற்றுகிறார். பெண்ணுறுப்புக்குள் போட்டியிட்டு நீந்திச்செல்லும் விந்தணுக்களில் வீரியம் மிக்க ஒன்று மாத்திரம் பெண்ணின் கருமுட்டைக்குள் புகுந்து கருவாகிறது. இதுதான் நாம் இதுவரைகாலமும் நம்பியி ருக்கும் உண்மை. ஆனால், இப்படியும் ஓர் உண்மையி ருக்கிறது. அதாவது, ஆண்களின் விந்தணுக்கள் நீந்திச் செல்லக்கூடியவையோ வேகமாக நகரக் கூடியவையோ அல்ல. அத்தோடு அவற்றால் கருமுட்டையைத் தேடிச் சென்று புக முடியாது. கரு முட்டைதான் ஒருவகையான ஈர்ப்புச் சுரப்பை வெளியேற்றி விந்தணுக்களை உள் வாங்குகிறது. அதிலும் முதலில் செல்லும் விந்தணுவை அது உள்வாங்குவதில்லை. தன்னை நாடி வந்து தனக்குள் புகவிருக்கின்ற விந்தணுக்களில் ஆரோக்கியமான - திடமான விந்தணுவைத் தெரிவு செய்தே உள்ளெடுக்கிறது. இதனால்தான் விந்தணு விரைந்து சென்று கருமுட்டைக்குள் புகுந்து கரு உண்டாவது என்பது பொய் என்றும் கருமுட் டையே தனக்கான விந்தணுவை ஈர்க்கிறது - தேர்ந்தெடுத் துக் கருவாக்குகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது உள்ளகத்தில் நிகழ்வதைப்போலவே வெளியிலும் இருக்கவேண்டும். அதாவது பெண்ணால் விரும்பப்படாத ஆணின் விந்தணுவைப் பெண்ணின் கருமுட்டையும் விரும்பாது என்கிறார்கள். இதனால்தான் குழந்தைப்பேறற்ற தம்பதிகள் அதிகரித்துக் கிடக்கிறார்கள். பெண் விரும்பும் இணையாக ஆண் இருக்கவேண்டும். பெண்ணின் பெற் றோரோ, உறவினரோ, ஏனையவர்களோ, ஏன்... இணை யாக வரப்போகின்ற ஆணோ விரும்பியதாக ஆண் - பெண் இணைவு இருக்கக் கூடாது என்பதே இதன் பின்னாலுள்ள கருத்து.

**இது முற்றிலும் பொய்**

ஒருவரை ஒருவர் விரும்பாத ஆண் - பெண் கள் இணைந்து குழந்தை பெற்றுள்ள சம்பவங்கள் பல உள்ளன. வன்புணர்வுகளுக்குப் பின்னர் கர்ப்பம் தரித்த பெண்கள் பலருள்ளனர். காதலித் துக் கரம் பிடித்துக் குழந்தைப் பேறில்லாதவர்கள் ஏராளம் உள்ளனர். எனவே கரு முட்டையால் விந்தணு ஏற்றுக்கொள்ளப்படுவதுபோல பெண்ணால் ஆண் ஏற்றுக்கொள்ளப்படுபவராக இருக்கவேண்டும் என்பதில் உண்மையில்லை என்கிறார் ஒருசாரார். கருமுட் டையானது விந்தணுவைத் தேர்ந்தெடுத்தே உள்வாங்கிக் கருவாக்குகிறது என்பதை மருத்துவ ரீதியாகக் கண்டறிந்தி ருக்கிறார்கள். அந்த உடலால் விரும்பப்படும் மனிதருடை யதாக அது தேர்ந்தெடுக்கும் விந்தணு இருக்கிறதா? இல் லையா? என்பதைக் கருமுட்டையானது அறிந்து செய லாற்றுகிறதா, இல்லையா என்பதை இன்னமும் கண்டறிய வில்லை. கருமுட்டைதான் விந்தணுவைத் தேர்ந்தெடுக் கிறது என்கிற இந்தப் புதிய கண்டுபிடிப்பில்கூட சந்தேகம் கொள்வோர் உள்ளனர். குழந்தையின்மை அதிகரித்துள்ள நிலையில் அதைக் கொண்டு வியாபாரம் பார்க்க விளை யும் மருத்துவ உலகம் பரப்பிவிட்டுள்ள புரளி என்று இதைச் சொல்வோரும் உள்ளனர். எது எப்படியிருப்பினும் நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையாகவுள்ள பெண்ணால் விரும்பப்படுவதுதான் இங்குள்ள - இயற்கைக்குப் பின்னா லுள்ள பெரும் இரகசியம். இரண்டு பாலினங்களாலும் விரும்பப்படும் உடலுறவையும் - உள உறவையுமே இயற் கையும் விரும்புகிறது. இதுதான் எப்போதும் உண்மை யாகவே இருக்கக்கூடிய உண்மை.

**ஆண்களின் விந்தணுக்கள் நீந்திச் செல்லக்கூடியவையோ வேகமாக நகரக் கூடியவையோ அல்ல.**

# குறைந்த நேரத் தூக்கம் நோய்களை அதிகரிக்கும்

“ஒரு மனிதர் ஓர் இரவில் 7 முதல் 8 மணி நேரம் வரை உறக்கம் கொள்ள மருத்து வர்களால் பரிந்துரைக் கப்படுகிறது/ பரிந்துரைக்கப் பட்டுள்ளது”

மோகனா



நாள் ஒன்றுக்கு 5 மணி நேரத்திற்கும் குறைவான தூக்கம் என்பது பல நோய்களின் ஆபத்துக்கு வழிவகுக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. வாழ்க்கையின் நடுப்பகுதி எனப் படும் 45 வயது முதல் பிற்பகுதி வரை ஐந்து மணி நேரத்திற்கும் குறைவாக தூங்குவது என்பது குறைந்தது இரண்டு நாள்பட்ட நோய்களையும் மற்றும் பல நோய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் ஆபத்தை உருவாக்கும் என்று யு.சி.எல் (University College London) எனும் லண்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தலைமையிலான ஒரு புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது. பன்னாட்டு மருத்துவ நாளிதழில் (PLOS) இதன் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**ஆய்வாளர்களின் வயது**

50, 60 மற்றும் 70 வயதுடைய 7,000க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களின் ஆரோக்கியத்தில் தூக்க காலத்தின் தாக்கத்தை வைட்ஹால் II கூட்டு ஆய்வில் (Whitehall II cohort) இருந்து பகுப்பாய்வு செய்தது.

**ஆய்வுத் தன்மை**

ஆய்வாளர்கள் 7,000 மனிதர்களை ஆய்வு செய்ததில், ஒவ்வொரு பங்கேற்பாளரும் எவ்வளவு நேரம் தூங்கினார்கள் என்பது அறியப்பட்டது. பின்னர் அவர்களிடம் இருந்த நோயின் தன்மையும் அறியப்பட்டது. பின்னர் அவர்களின் இறப்பு/ இதய நோய்/புற்றுநோய்/ நீரிழிவு போன்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாள்பட்ட நோய்கள் கடந்த 25 ஆண்டுகளில் கண்டறியப்பட்டதா என்பதையும் ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர்.

**5 மணி நேரத்துக்கும் குறைவான தூக்கம்**

50 வயதில் 5 மணி நேரம் அல்லது அதற்கும் குறைவான உறக்கம் பெற்றவர்கள், ஒரு நாளில் 7 மணி நேரம் தூங்கியவர்களைவிட, நாள்பட்ட

நோயால் பாதிக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் 20% அதிகம் இருந்தது. மேலும் அவர்களுக்கு 25 ஆண்டுகளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாள்பட்ட நோய்கள் கண்டறியப்படுவதற்கான வாய்ப்புகள் (40%), 7 மணி நேரம் தூங்கியவர்களைவிட அதிகம் காணப்பட்டன.

கூடுதலாக, 50, 60 மற்றும் 70 வயதில் ஐந்து மணி நேரம் அல்லது அதற்கும் குறைவான நேரம் தூங்குவது, ஏழு மணி நேரம் வரை தூங்குபவர்களுடன் ஒப்பிடும்போது, 30% முதல் 40% வரை பல்நோய் அபாயத்துடன் தொடர்புடையது என்பதும் அறியப்பட்டது.

இறப்பு அபாயமும், குறைவுத் தூக்கமும்: 50 வயதில் 5 மணி நேரம் அல்லது அதற்கும் குறைவான தூக்கம் 25 வருட பின்தொடர்தலில் 25% இறப்பு அபாயத்துடன் தொடர்புடையது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். குறுகிய தூக்க காலம் என்பது நாள்பட்ட ஆபத்தை அதிகரிக்கிறது மற்றும் நோய்(கள்) அதை யொட்டி இறப்பு அபாயத்தை அதிகரிக்கிறது என்பதும் தெரிய வந்துள்ளது.

**ஆய்வாளர்கள் கருத்து**

முன்னணி எழுத்தாளர்களான, டாக்டர் செவெரின் சபியா (UCL Institute of Epidemiology & Health, and Inserm, Université Paris Cité இன்ஸ்டிடியூட் ஆஃப் எபிடெமியாலஜி & ஹெல்த், மற்றும் இன்செர்ம், யுனிவர்சிட்டி பாரிஸ் சிட்டே-) குறைவான தூக்கம் கொள்பவர்களைப் பற்றிக் கூறுவதாவது:

அதிக வருமானம் உள்ள நாடுகளில் பல்வகை நாள்பட்ட நோய்கள் அதிகரித்து வருகின்றன. மேலும் பாதிக்கும் மேற்பட்ட வயதான பெரியவர்களுக்கு இப்போது குறைந்தது இரண்டு நாள்பட்ட நோய்களாவது இருக்கின்றன. இது உயர் சுகாதார சேவை பயன்பாடு, மருத்துவமனையில் சேர்க்கப்படுதல் மற்றும் இயலாமை ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருப்பதால், பொது சுகாதாரத்திற்கு ஒரு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

**மனிதனின் தூக்க நேரம்**

ஒரு மனிதர் ஓர் இரவில் 7 முதல் 8 மணி நேரம் வரை உறக்கம்கொள்ள மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது/பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் அல்லது அதற்குக் கீழே உள்ள தூக்க நேரங்கள் என்பவை முன்பு தனிப்பட்ட நோய்களுடன் தொடர்புடையவைகளாக இருந்தன. குறுகிய தூக்க காலமும் நாள்பட்ட நோய்களுடன் தொடர்புடையது என்பதை தங்கள் கண்டுபிடிப்புகள் காட்டுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**தூக்கத்தின் முன்னர் செய்ய வேண்டியவை:**

ஒரு சிறந்த இரவு தூக்கத்தை உறுதி செய்ய படுக்கையறை அமைதியாகவும், இருட்டாகவும் இருக்க வேண்டும்.

தூங்கத் தேவையான வசதியான வெப்பநிலை இருப்பதை உறுதிசெய்வது அவசியம்

முக்கியமாக படுக்கை அருகிலுள்ள எலக்ட்ரானிக் சாதனங்களை அப்புறப்படுத்த வேண்டும்

படுக்கைக்குச் செல்லுமுன் அதிக உணவைத் தவிர்க்கவும்.

பகல் நேரத்தில் உங்களின் சுறுசுறுப்பான செயல்பாடு, உடற்பயிற்சி மற்றும் பகலில் வெளிச்சத்தில் இருப்பது போன்றவையும் நல்ல ஆழ்ந்த தூக்கத்தை ஊக்குவிக்கும்.

இது போன்ற நல்ல சூழல்தான் தூக்க சுகாதாரத்தை மேம்படுத்தும். இது அவசியமும் கூட.




**அதிக உறக்கம் நல்லதா?**

ஆய்வின் ஒரு பகுதியாக, 9 மணி நேரம் அல்லது அதற்கு மேல் நீண்ட நேரம் தூங்குவது உடல்நல விளைவுகளை பாதிக்கிறதா என்பதையும் ஆராய்ச்சியாளர்கள் மதிப்பீடு செய்தனர். 50 வயதில் நீண்ட தூக்கம் என்பதில் ஆரோக்கியமான நிலையில் உள்ள மக்களில் பல நோய்களுக்கு இடையே தெளிவான தொடர்பு இல்லை. இருப்பினும், ஒரு பங்கேற்பாளர் என்பவர் ஏற்கனவே ஒரு நாள்பட்ட நிலையில் உள்ள நோயுடன் கண்டறியப்பட்டிருந்தால், நீண்ட நேர தூக்க காலம் என்பதும் மற்றொரு நோயை உருவாக்கும் அபாயத்துடன் 35% அதிகரித்தது. இது தூக்கத்தை பாதிக்கும் அடிப்படை சுகாதார நிலைமைகள் காரணமாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

பிரிட்டிஷ் ஹார்ட் ஃபவுண்டேஷனின் (British Heart Foundation) மூத்த இருதய சிகிச்சை செவிலியர் ஜோ விட்மோர் (Jo Whitmore)தூக்கம் பற்றி சொல்வதாவது :

போதுமான தூக்கம் உங்கள் உடலை ஓய்வெடுக்க அனுமதிக்கிறது.

மோசமான தூக்கம் இதய நோய் அல்லது பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும்.

தூக்கம் குறைவு என்பது வீக்கத்தை அதிகரிப்பது மற்றும் ரத்த அழுத்தத்தை அதிகரிப்பது என பல வழிகள் உள்ளன.

**குறைவான தூக்கத்தால் ரத்த அழுத்தம் கூடுகிறது**

இந்த ஆராய்ச்சி வளர்ந்து வரும் ஆராய்ச்சிக்கு உதவி சேர்க்கிறது. இது ஒரு நல்ல இரவு தூக்கத்தைப் பெறுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது என்று கூறியுள்ளார்.

# தமிழ்த் தலைவர்களின் தரவுகளற்ற வெற்று உரைகளால் பயனில்லை

நியூட்டன்

வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றுகின்ற உரைகள் தரவுகளை அடிப்படையாகக் கொண்டவையாகப் பெரும்பாலும் இருப்பதில்லை. வெறும் மேடைப்பேச்சுகள் போலவே நாடாளுமன்றிலும் உரையாற்றும் வழக்கத்தை இந்த உறுப்பினர்கள் கொண்டுள்ளனர்.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தமிழ்த் தலைவர்கள் நாடாளுமன்ற நூல் நிலையத்தைப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். முதுமை காரணமாகவும் தமிழைத் தவிர வேறு மொழிகள் தெரியாததாலும் தற்போதுள்ள பலர் அந்த நூல் நிலையப் பக்கமே போவதில்லை. நாடாளுமன்றக் கூட்டத்தொடர் முடிந்ததும் அங்கிருந்து வெளியேறிவிடுகின்றனர். பலர் மதிய உணவு உண்ட பின், "உண்ட களை தொண்டர்க்கும் உண்டு" என்ற பாணியில் அங்கிருந்து வெளியேறி விடுகின்றனர்.

நாடாளுமன்றில் தீர்மானங்களை எடுக்கும் விவாதங்கள் பெரும்பாலும் மாலைவேளையில் இடம்பெறுவதால் அவற்றில் இவர்கள் கலந்துகொள்வதில்லை. ஒவ்வொரு வருடமும் நாடாளுமன்றில் வரவுசெலவுத் திட்டம் முன்வைக்கப்படும்போது பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என உணர்ச்சி பொங்கப் பேசுகின்றனரே தவிர தரவுகளுடன் அவற்றை ஒப்புவித்துப் பேசுவதில்லை. அதனால் அவர்களின் உணர்ச்சியூட்டும் பேச்சுகளைச் சிங்களவர்கள் கண்டுகொள்வதில்லை.

**பாதுகாப்புக்கு அதிக நிதி**

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் 41ஆயிரம் கோடி ரூபா பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது பாதீட்டில் 35 சதவீதத்தைப் பிடித்திருக்கிறது. தமிழ்த் தலைவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் காலத்திலிருந்து பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவது குறித்துத் தமிழ்த் தலைவர்கள் கருத்து வெளியிட்டு வருகிறார்கள். கடந்த ஆண்டில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இலங்கை அரசு என்னவெல்லாம் செய்தது என்பதைத் தரவுகளுடன் சமர்ப்பித்து, இம்முறை ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி அதிகமாக உள்ளதா? இல்லையா? என்பதைக் கண்டறிந்து, கடந்த வருடத்தைவிட இந்த வருடத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றதாயின் அதைத் தர்க்க ரீதியான விவாதங்களாக முன்வைக்க முடியும். ஆனால் தமிழ்த் தலைவர்கள் அவ்வாறு செய்ய முயற்சிப்பதேயில்லை.

இத்தகைய குறைபாடான தரவுகளற்ற பேச்சுகள் நாடாளுமன்ற கன்சார்ட் பதிவில் இடம்பெற்றாலும் வெறும் பேச்சுகளாகவே போய்விடுகின்றன. இது விடயமாக ஆராய்ந்து தயார்ப்படுத்திக்கொண்டு எவரும் நாடாளுமன்றம் செல்வதுமில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆய்வு அலுவலரை நியமிக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டபோதிலும் ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடிய காத்திரமான ஒருவரை நியமிக்காது தமது பிள்ளைகளையோ சொந்தக்காரரையோ கட்சித் தொண்டர்களையோ நியமித்துத் தமிழ்த் தலைவர்கள் சம்பளம் பெற்றுக்கொடுக்கிறார்கள். இதுவும் இவர்களிடமுள்ள முக்கிய குறைபாடாகும்.

**தலைமைச் செயலகம் இல்லாத நிலை**

வடக்குக் கிழக்கில் பல்வேறு தமிழ்க் கட்சிகள் பதிவு செய்யப்பட்டு இயங்குகின்றன. அவை வருடா வருடம் ஆண்டு விழாக்களைச் செய்து ஊடக அறிக்கைகளை வெளியிடுகின்றன. ஆனால், கட்சி அங்கத்தவர் பதிவேடுகளோ, நிதி அறிக்கைகளோ, தரவுகளோ உட்கட்டுமாண வசதிகளோ இருப்பதில்லை. இறுதிப் போரில் இறந்தவர்களின் தொகை, விவரத்தைக்கூடத் தமிழ்க் கட்சிகள் எவையும் இதுவரை பட்டியல்படுத்தவில்லை. தலைமைச் செயலகம் இல்லாத கட்சிகள் பலவுள்ளன. தேவைக்கு ஏற்ப யாராவது ஒருவரின் வீட்டில் கூட்டம் போடுவது, பலர் கலந்துகொள்ளாது விடுவது, உரிய முறையில் கூட்டம் நடத்தாது விடுவது ஆகியனவெல்லாம் தமிழ்த் தலைவர்களின் நடைமுறையாகவும் ஒழுக்கமாகவும் ஆகிவிட்டது.

இவர்களிடம் வெளிப்படையான ஜனநாயகத் தன்மை பேணப்படாததால் கட்சிக்குள் தனிநபர்கள் முரண்படும் சூழலும் பின்னர் தனித்துச் சென்று கட்சியை உருவாக்குவதும் எனத் தொடர்ச்சியாகத் தமிழ்க் கட்சிகளின் உறுதிப்பாடு சிதைந்து வகிறது.

**பாதுகாப்பு நிதியை எவ்வாறு பயன்படுத்துகின்றனர்**

பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கி, ஆயுதங்களை வாங்கித் தமிழரை அழிக்கிறார்கள் என்று அமிர்தலிங்கத்தின் காலத்திலிருந்து கூறப்பட்டு வருகின்ற போதிலும் அதைவிடவும் பல விடயங்களையும் இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகிறார்கள்.

ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம்பெற்ற பின்னர் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர்களாகப் பலர் இருந்துள்ளனர், அதேவேளை பாதுகாப்புச் செயலர்களாகவும் பலர் இருந்துள்ளனர். சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இற்றைவரை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து அவற்றை இவர்கள் தமக்குச் சாதகமாக வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறார்கள்.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த சூழல் அதன் பின்னர் இலங்கைப் படையினருக்கு இருக்கவில்லை. புலிகளின் செயற்பாடுகள், ஜே.வி.பி. கிளர்ச்சி என நாடு முழுதும் சிக்கல் நிறைந்த சூழல் இருந்தது. அதனால் பல உயரதிகாரிகளை வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு அனுப்பினர். இதற்காகப் பல கோடி ரூபாய்களை வெளிநாட்டுப் பயிற்சிகளுக்குச் செலவிட்டனர்.



*சமையல் சமையல்*

# பால் அப்பம்

அப்பம் சுடுவதென்றால் அன்று வீடே களைகட்டியிருக்கும். அந்த அளவுக்கு அப்பத்துக்கு மவுசு அதிகம். ஆனாலும் வீடுகளில் அப்பம் சுடுவதென்பது அரிது. இது பழங்காலக் கதை. முன்னைய காலங் களுடன் ஒப்பிடுகையில் வீடுகளில் அப்பம் சுடுவது ஒப்பீட்டளவில் அதிகரித்து இருந்தாலும் அப்பம் இப்போது தெரு வோரச் சுவையுண்டியாக வெகு பிரபலமடைந் திருக்கிறது. வீடுகளில் அப்பத்தைச் சுவைக்கும் வாய்ப்பில்லாதவர்களுக்கும் அப்பப் பிரியர்களுக்கும் இந்தத் தெரு வோர அப்ப வண்டில்கள் வரப்பிர சாதம்தான். எனினும் வீட்டில் ஆக் கியுண்ணும் அப்பத்தில் கிடைக் கின்ற தரமோ, சுவையோ, ஆரோக் கியமோ தெருவோரம் கிடைக்கும் அப்பங்களில் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண் டும். ஆகவே இந்த வாரம் நாம் அனைவரும் வீட்டில் அப்பம் ஆக்கி யுண்பது எப்படி என்று பார்ப்போம்.



**தேவையான பொருள்கள்**

சிவப்புப் பச்சையரிசி (தீட்டல்) 1 அரைப் பேணி, அவித்த கோதுமை மா - 1 அரைப் பேணி, இளநீர், உப்பு, சீனி, தேங்காய் எண்ணை ஆகியன - சிறிதளவு, தேங்காய்ப்பால் - ஒரு தேங்காயிலிருந்து பெறப்பட்டது.

**எப்படிச் செய்வது...?**

சிவப்புப் பச்சையரிசியை முதல்நாளே நீரில் ஊறவைத்துச் சொர சொரப்பாக அரைத்துக்கொள்ளுங்கள். அதனுடன் அவித்த கோதுமை மாவைக் கலந்து அந்தக் கலவையைப் புளிக்க வைப்பதற்கு இளநீர் சிறிதளவு சேருங்கள். சேர்த்த கலவையை மறுநாள் வரை மூடி வையுங் கள்.

மறுநாள் தேங்காயைத் துருவி பால் பிழிந்து முதல், இரண்டாம் பாலைத் தனியொரு பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். அதனுடன் சீனி மற்றும் உப்புக் கற்கல் இரண்டைச் சேர்துக் கலக்குங்கள். மூன்றாம் பாலை ஊறவைத்துள்ள மாக் கலவையுடன் கலந்துவிடுங்கள். மாக் கலவையானது சற்று இறுக்கமாக இருப்பதுடன், அப்பம் ஊற்றக்கூடிய பதத்திலும் இருக்குமளவுக்கு நீர் சேர்த்திருக்கவேண்டும். மாக்கலவை யுடன் இப்போது தேவையான அளவுக்கு உப்புச் சேருங்கள்.

அப்பத்துக்குரிய தாச்சியை அடுப்பில் வைத்து அதன் அடிப்புறத்தில் தேங்காய் எண்ணையைப் பூசி சூட்டை மிதமாக்கி வைத்திருங்கள். மாக்கலவையை அளவாக எடுத்து (ஒரே அளவைக் கரண்டியில் கடைப்பிடிப்பது நல்லது) ஊற்றித் தாச்சியைத் தூக்கிச் வட்டமாகச் சுற்றிவிட்டு பால் கரைசலையும் கரண்டி மூலம் அளவைக் கடைப் பிடித்து ஊற்றிச் சிறிது மூடி வெந்து வரும்போது இறக்குங்கள். ஒவ் வொரு அப்பத்தையும் சட்டியிலிருந்து எடுத்த பின்னர் எண்ணைப் பூசி மாவை ஊற்றி வட்டமாக்கி அடுத்த அப்பத்தை ஆக்குங்கள். சுடச் சுடச் சுவையுங்கள். அப்பம் தித்திக்கும்.

தலதாமாளிகைக் குண்டுவெடிப் பின் பின்னர் நாடு முழுதும் பெரும் இனக்கலவரம் ஒன்று ஏற்பட்டுப் பெரிய நெருக்கடிகள் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், படை யினரைப் பயன்படுத்திச் சுமூகமான எதிர் நடவடிக்கைகளை அரசு முன் னெடுத்தது. புலிகளின் தாக்குதல்க ளுக்கு எதிர்வினையாக இனக்கல வரத்தை ஏற்படுத்தும் நிலை தவிர்க் கப்பட்டது. அதற்கான பயிற்சிகள், தந்திரோபாயத் திட்டங்களை எல் லாம் வெளிநாடுகளின் உதவியுடன் இலங்கைப் படையினரும், உயரதி காரிகளும் பெற்றிருந்தனர்.

சந்திரிகா அரச தலைவரானபின்னர் முப்படைகளில் உயர் பதவிகளில் இருந்தவர்களுக்கு பயங்கரவாதச் செயற்பாடுகளை நுட்பமாகக் கையா ளும் புலனாய்வுப் பயிற்சிகள் அது சார்ந்த நிர்வாகப் பயிற்சிகள் எனப் பல விடயங்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வழங்கப்பட்டன. அதற்காகப் பெருமளவு நிதி ஒதுக்கப் பட்டது.

இதைவிடப் பாதுகாப்பு அமைச்சு மூலமே நில அளவை, புராதன சின் னங்களைக் காப்பது, தொல்லியல் மையங்களைக் கண்டறிவது போன்ற பல்வேறு விடயங்கள் கையாளப்படு கின்றன. சிங்கள - பௌத்த பரம்பல், குடியேற்றங்கள், ஆக்கிரமிப்புகள் என்பனவெல்லாம் இதன் மூலமே நிறைவேற்றப்படுகின்றன. இதற்கா கவும் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது.

இவற்றுக்கு மேலதிகமாக வெளி நாட்டுப் படையினருடன் கூட்டுப் பயிற்சிகள் எனப் பல விடயங்கள் உருவாக்கப்பட்டன. போர் முடிவுற்ற பின்னரும் இந்தப் பயிற்சிகளும் ஆய்வுகளும் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. இதுபோன்ற பல்வேறு படைத் துறைசார் செலவீனங்கள் செய்யப்படுவதும் படையினரை நவீன மயப்படுத்துவதும் தொடர்ச் சியாக நடந்து வருகின்றன. இவைபற் றித் தமிழ் உறுப்பினர்கள் தரவுகளைச் சேகரித்து வெளியிடுவதில்லை.


பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்கப்படும் நிதிச் செலவு சார்ந்த தரவுகளைச் சேகரித்து நாடாளுமன்றில் விவதிப் பதே தமிழ் உறுப்பினர்களின் பணி யாக இருக்கவேண்டும். அதற்கான மூளைப்பலமும் உழைப்பும் விருப் பும் அவர்களிடம் இல்லாதிருப்பது தமிழர்களுக்குப் பெரிய பின்னடை வாகும்.

# பசி வந்தது படிப்பு பறந்தது...!



இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது பாடசாலை மாணவர்களே. உணவு, போக்குவரத்து, பாடசாலை உபகரணங்களின் விலையேற்றம் என முக்கிய விடயங்கள் மாணவர்களைப் பாதித்திருக்கின்றன. அதிலும் ஒரு வீட்டில் 3 மாணவர்கள் இருந்தால் பெற்றோரின் நிலை மிகவும் ஆபத்தாக உள்ளது. நிலமை இவ்வாறிருக்கும்போது இலங்கையில் இலவசக் கல்வி வழங்கப்படுகிறது என்பது வெறும் சொல் அளவில் உள்ள கூற்றாகியுள்ளது. தற்போதுள்ள நிலை தொடர்ந்தால் இனிவரும் நாள்களில் இந்த இலவசக் கல்வியைப் பணக்கார மாணவர்களால் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நெருக்கடிக்கு முன்பான காலப்பகுதியில்கூட க.பொ.த. உயர் தர பரீட்சையில் செல்வந்தர்களின் பிள்ளைகளே மருத்துவத்துறை, பொறியியல் துறை ஆகிய முக்கிய பாடங்களில் கால் பதித்தனர். தனிப்பட்டட வகுப்புகள், தனியார் கல்வி நிலையப் படிப்பு எனப் பணத்தைச் செலவிட்டுப் பரீட்சையில் தேறி இலவசமாகப் பல்கலைக் கழகக் கல்வியைப் பெற்றார்கள். போக்குவரத்துச் செலவற்ற கிராமப்புற மாணவர்கள் அல்லது கிட்டிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இத்தகைய தனிப்பட்ட வகுப்புக்கள் சாத்தியமற்றவையாக இருக்கின்றன. அதனால் அவர்கள் கணித, விஞ்ஞான பாடங்களைத் தெரிவு செய்வதும் குறைவாகவே இருக்கின்றது.



**சத்தியநாதன்**

**மதிய உணவு**

"நாளைக்குப் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட விருப்பதால் பிள்ளைகள் மிகக் கவலையுடன் இருக்கிறார்கள்" என்று 2015 காலப்பகுதியில் கிளிநொச்சிக் கிராமம் ஒன்றில் வசித்த தாய் ஒருவர் கூறினார்.

"ஏன் அப்படி கூறுகிறீர்கள் பாடசாலை விடுமுறை என்றால் மாணவர்களுக்கு மகிழ்ச்சிதானே?" என்று கேட்டபோது, "அதில்லப் பிரச்சினை. பாடசாலை இயங்காது விட்டால் அவர்களுக்கு மதிய உணவு கிடைக்காது என்ற கவலைதான்" என்றார். சாதாரண சூழலில் கிளிநொச்சிக் கிராமம் ஒன்றின் நிலை இவ்வாறிருந்தது என்றால் இந்தப் பொருளாத நெருக்கடியில் அவர்களின் நிலை எப்படியிருக்கும்...?

தற்போதுள்ள சூழலில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்க்கவே வாய்ப்புண்டு. தற்போதைய புள்ளி விவரங்களின்படி 10 வீதமான மாணவர்கள் நாடு முழுதும் பாடசாலை இடைவிலகலை மேற்கொண்டிருக்கிறார்கள். இது அடுத்த ஆண்டுக்குள் இரண்டு மடங்காக அதிகரிக்கலாம். ஏனைய மாணவர்கள் வாரத்தில் 5 நாள்களும் பாடசாலைக்குச் செல்லாது ஓரிரு நாள்களைத் தவிர்த்து வருகிறார்கள்.

**காலை உணவு**

ண்ணெண்ணை, யூரியா தட்டுப்பாடு காரணமாக உப உணவுப் பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சோளம், மரவள்ளி ஆகிய பயிர்களைக்கூட உற்பத்தி செய்ய முடியாத சூழல் ஏற்பட்டிருக்கிறது. இதைவிட கோதுமை மாவின் விலையேற்றம், மின் கட்டண உயர்வு, வேறு பொருள்களின் விலையேற்றம் காரணமாக வெதுப்பகப் பொருள்களின் விலை 3 மடங்கு அதிகரித்துள்ளது. அவற்றின் நிறை மற்றும் தரங்களிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

விவசாயம், மீன்பிடி, சிறுதொழில் புரிவோருக்கு வேலையில்லாத சூழல் ஏற்பட்டுள்ளதால் பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பசித்திருக்கும்போது பாடசாலைக் கல்வியைக் கிரகிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பசி வந்தால் பத்தும் பறந்துபோம் என்பது தற்போது இலங்கையிலுள்ள மாணவர்களுக்கு நன்கு பொருந்தும். தமது பிள்ளைகளுக்குக் காலை உணவைக்கூடச் சீராக வழங்கமுடியாத சூழல் பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது.

**பாடசாலை உபகரணங்களின் விலை உயர்வு**

இறக்குமதிப் பொருள்களுக்குத் தடை விதித்திருப்பதாலும் வேறு பல பொருள்களுக்கு அதிக வரி விதித்திருப்பதாலும் உள்நாட்டு உற்பதியாளர்களுக்கான உள்ளீடு



களைப் பெறமுடியா திருப் பதாலும் கொப்பி, பேனா, பாடசாலைப் பைகள், பதாணிகள் ஆகியவற்றின் விலைகள் 4 மடங்கு அதிகரித்துள்ளன. ஒரு சப்பாத்தின் விலை 4 ஆயிரம் அளவிலும் பாடசாலைப் பையின் விலை 4 ஆயிரம் ரூபாவுக்கு மேலும் சாதாரண அப்பியாசக் கொப்பியின் விலை 3 மடங்கைத் தாண்டியிருப்பதும் பெற்றோருக்கு மிகப் பெரிய சுமையைக் கொடுத்துள்ளது.

**பாதீட்டில் தீர்வில்லை**

2023ஆம் ஆண்டுக்கான பாதீடு அரச தலைவர் ரணில் விக்கிரமாவால் கடந்த வாரம் நாடாளுமன்றில் சமர்க்கப்பிக்கப்பட்டது. அதில் பாடசாலை மாணவர்களுக்கான சிறப்பு முன்மொழிவுகள் எவையும் அடங்கவில்லை. இதுபற்றி பாதீட்டு விவாதங்களில் விவாதிக்கப்பட்டு வருகிறது. பாடசாலை மாணவர்களுக்கான உணவு, போக்குவரத்து, உபகரணங்களின் இறக்குமதித் தடை வரி விலக்கு போன்றவற்றைச் சிறப்பாக முன்மொழிய வேண்டிய தேவையுண்டு. இது விடயத்தில் பாதீட்டு தயாரிப்புக்கு முன்னர் எழுத்து மூல வேண்டுகோள்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்திருக்க வேண்டும். அவ்வாறு பலராலும் முன்மொழியப்பட்டிருந்தால் அதைப் பாதீட்டில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும்.

**கொடையாளி நாடுகளையும் அமைப்புகளையும் அணுகுவது**

பாடசாலை மாணவர்களின் விடயத்தில் கொடையாளி நாடுகள், நட்பு நாடுகள், பன்னாட்டு அமைப்புகள் போன்றவற்றை இலங்கை அரசு நாடவேண்டிய தேவையுண்டு.

வடக்குக் கிழக்குத் தமிழ் மாணவர்கள் விடயத்தில் புலம்பெயர் தனிநபர்களும் அமைப்புகளும் தாம் கல்வி கற்ற பாடசாலைகளுக்கு அதிகம் உதவுகின்றனர். அவற்றை பாடசாலை உபகரணங்களுக்கான உதவிகளாக மாற்றுவதன் மூலம் அடிப்படைப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்க முடியும்.

17

# வாரம் ஒரு சொல்....!

## அணியம், கடையால்

இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கிலும் குறிப்பாகக் கரையோரச் சமூகத்திலும் அதிகம் புழக்கத்திலுள்ள ஒரு சொல்லாகும். மீனவர்கள் தொழில் செய்யப் பயன்படுத்தும் மீன்பிடிக் கலத்தின் முன், பின்பகுதிகளைக் குறிக்கும் சொற்களாக இருக்கின்றன. பெயர்ச் சொல்லாகப் பயன்பாட்டிலுள்ளது. மீன்பிடிக் கலத்தின் முன் பகுதியை அணியம் என்றும் பின்பகுதியைக் கடையால் என்றும் அழைக்கிறார்கள்.

"கடையால் பக்கம் போ, அணியத்துக்க பாரம் கூடீற்று..."

"கடையால் கட்டையத் திறந்துவிடு"

"கடையால் உடைச்சுப் போட்டுது, இஞ்சின் பூட்டி ஓடுறது கஸ்ரம்"

"கடையால் பலகை மாத்தவேணும், நல்லாப் பழுதாப் போச்சுது"

இவ்வாறெல்லாம் கடையால் என்ற சொல் புழக்கத்திலுள்ளது. கலத்தின் பின் பகுதி, கடைசியாக அமைந்த பாகமாக இருப்பதால் கடை + ஆல் என்று அழைக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

அதேபோலதான் அணியமும். கலத்தின் முன்பகுதியாயும், கடலைக் கிழித்துச் செல்லக்கூடிய வகையில் கூரான பகுதியாயும், உயரமான பகுதியாயும் இருப்பதால் அணியம் என்று அதை அழைக்கிறார்கள்.

"முன்னுக்குப் பாரம் கூடிப்போச்சுது அணியம் குத்தப் போகுது"


"முன்னுக்குப் பாரம் காணாது அணியம் தூக்கித் தூக்கி அடிக்குது"

"அணியத்துக்க சின்ன ஓட்டை. அதுக்குள்ளாளதான் தண்ணி வருகுது"

என்றெல்லாம் அணியம், கடையால் ஆகிய சொற்கள் மீனவர்கள் மத்தியில் அதிகம் புழக்கத்திலுள்ளன.

# நீங்கள்

# பொறுப்புள்ள தந்தையரா? பொறுப்பற்ற தந்தையரா?



நாகராசா

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் தமிழர் பகுதிகளில் பல குடும்பங்கள் வறுமையால் வாடுகின்றன. பாடசாலை மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவை பற்றி அதிகம் பேசப்பட்டு வருகிறது. 2020 இல் தொடங்கிய கொவிட் தொற்றுநோய்த் தாக்கம் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், தொடர் பொருளாதார நெருக்கடிகளால் பல தொழில்களும் பாதிக்கப்பட்டு மக்களின் வருமானத்தில் தொய்வு நிலை ஏற்பட்டதுடன் பொருள்களுக்கான தட்டுப்பாடும் விலையேற்றமும் நீடித்தது. மண்எண்ணெய், யூரியா இன்மை ஆகிய காரணங்களால் விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுவிட்டன. சமூகத்தில் நிலவும் தற்போதைய வறுமை நிலைக்கு இவை காரணமாக இருந்தபோதிலும் இந்த நெருக்கடியான காலத்தை எவ்வாறு சமாளிப்பது என்பதில் மக்கள் தெளிவாக இருக்காததும் இந்தப் பஞ்சத்துக்குக் காரணம் எனலாம்.

**நாளாந்தக் கூலி உயர்வு**

பொருள் தட்டுப்பாடு அதனாலுண்டான விலையேற்றம் என வாழ்க்கைச் செலவுகள் அதிகமாகியுள்ளன. அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோரின் ஊதியம் உயர்வடையவில்லை. பொருள்கள் பலவும் விலையேறியபோதிலும் இந்தத் தரப்பினரின் ஊதியம் பழைய நிலையிலேயே தொடர்கிறது. ஆனால் கூலித் தொழிலாளர்கள், ஏனைய தொழில்களில் ஈடுபடுவோரின் நிலை அவ்வாறில்லை. அவர்களின் நாளாந்தச் சம்பளத் தொகை உயர்வடைந்துள்ளது. நாளாந்தக் கூலித் தொழிலாளர்களால் தற்போது 2 ஆயிரம் ரூபாவுக்கு மேலாக நாளொன்றுக்கு உழைக்க முடிகிறது. ஆனால், அன்று மாலையே அதில் அரைவாசிக்கு மேலான தொகையைக் குடிப் பழக்கத்துக்குச் செலவாக்கிவிடுகிறார்கள். இது வறுமைப்பட்ட குடும்பங்களை மேலும் துன்பத்துக்குள் தள்ளுகிறது.

பியர் ரின் ஒன்றின் விலை கிட்டத்தட்ட 500ரூபாவாகவும் கால் போத்தல் சாராயத்தின் விலை கிட்டத்தட்ட 500 ரூபா அளவில் இருக்கையில் அவற்றை வாங்கி அருந்தும் அன்றாடக் கூலித் தொழிலாளர்கள் பலர் 50 ரூபா விலையில் உள்ள முட்டைகளில் 10ஐ வீட்டுக்கு வாங்கிச் செல்வதோ, ஒரு போத்தல் பசுப் பால் 150 ரூபாவாக இருக்கும் நிலையில் அதை வாங்கிச் செல்வதோ இல்லை.

இந்த நெருக்கடி மிக்க சூழலில் பலர் தமது நாளாந்தச் செலவுகளைக் குறைத்துள்ளனர். கிடைக்கும் வருமானத்தில் சீவிப்பது, பெற்றோல் செலவைக் குறைப்பதற்காகச் சைக்கிள்களில் பயணம்



செய்வது, பல இடங்களிலும் விசாரித்து குறைந்த விலையில் எங்கு பொருள்கள் கிடைக்கின்றன என்பதை அறிந்து அங்கு சென்று வாங்குவது என இந்த நெருக்கடி மிக்க காலச் சூழலை எதிர் கொள்கின்றனர். இதில் பெண்களின் பங்கு மிக அதிகமாக இருக்கிறது. மாத வருமானம் பெறும் மக்கள் தமது சம்பளம், ஓய்வூதியம் ஆகியவற்றை வைத்துத் திட்டமிட்டுச் செயற்படுவதைக் காணமுடிகிறது. ஆனால், இவை பற்றியெல்லாம் சிந்திக்காத வறுமையான குடும்பங்களின் தலை வர்கள் பலர் மதுபானங்களுக்கு அதிகம் செலவு செய்கிறார்கள். இதனால் தமது குடும்பச்சூழலை மேலும் சிக்கலுக்குள்ளாக்குவதுடன் குடும்பத்துக் குக் கிடைக்கக்கூடிய உதவிகளையும் இல்லாது செய்து விடுகின்றனர். இவ்வாறானவர்களின் குடும் பங்களுக்கு யாரிடமாவது உதவி கேட்டால் "அவர் குடிச்சுக்கொண்டு திரிய நாங்களோ உதவி செய் வது?" என்று தட்டிக்ககழிப்பதால் அவரது மனைவி, பிள்ளைகளுக்குக் கிடைக்கக்கூடிய வசதி வாய்ப் புகள் இல்லாது போய்விடுகின்றன.

குடும்பம் வறுமையில் இருக்கும்போது குடிப் பது என்பது குடும்பத் தலைவரின் பொறுப்பின்மை யையே காட்டுகிறது. தாங்கள் வாழும் சூழலில் மேற்கொள்ளக்கூடிய விவசாயம், கோழி, ஆடு, மாடு வளர்ப்பு ஆகிய முயற்சிகளைக்கூடக் குடிப்பழக்கமுள்ளவர்கள் மேற்கொள்வதில்லை. இவ்வாறான குடும்பங்களில் வாழும் பெண் பிள்ளைகள் போசாக்கான உணவின்றியும் நல்ல உடைகளின்றியும் ஏனைய விடயங்களிலும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் வீட்டுக்குள் ளேயே முடங்கியிருக்கும் நிலை ஏற்பாடுகிறது. இது அவர்களை மிகவும் மன உளைச்சலுக்கு உள்ளாக்குகிறது.

இவ்வாறான குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி போதை விற்பனை செய்பவர்களிடம் சிக்குகின்றனர். தமது எதிர்காலம் பற்றிய எவ்வித எதிர்பார்ப்பும் தமது வீட்டாரிடம் இல்லாதிருப்பதால் தமக்கு உதவ முன்வருபவர்களை நம்பும் நிலை அவர் களுக்கு ஏற்படுகிறது. பலர் போதைக்கு அடிமை யாவதும் சிறை செல்வதும் ஏனைய வழிகளில் துன்பப்படுவதும் நடக்கிறது.

அடிப்படையில் தந்தைமாரின் குடிப்பழக்கம் நிறுத்தப்பட்டாலே போதைப் பாவனையில் விற் பனையில் ஈடுபடுவோரின் தொகை குறையவும் குற்றச் செயல்கள் குறையவும் வாய்ப்பு ஏற்படும். இவ்வாறான குடும்பப் பின்னனியை இல்லாது செய்வதற்கு பொறுப்புள்ள தந்தையரை உருவாக் குவதே அதன் முதற்படி. ஏழைகள் மதுப் பாவ னையைக் கைவிட்டாலே தற்போதுள்ள வறுமை நிலை அரைவாசி ஆகிவடும். இதைச் சீர்செய் யக்கூடிய அரசியல் தலைவர்களோ, சமூகத் தலைவர்களோ, சமயத் தலைவர்களோ தமிழர் மத்தியில் இல்லாதிருப்பது துயரமானது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.11.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781